
# காமாந்

"சஞ்சீவி"



செல்வன் பிரச

# காமாந்தகாரி

ஆசிரியர்

எம். ஏ. ராஜாராம்
“ சஞ்சீவி ”

உள்நாடு
விலை 8 அணு

வெளிநாடு
விலை 10 அணு

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

செல்வன் பிரசுரம்
22, கச்சேரி ரோடு - சென்னை-4

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 739
நன்கொடை எண்: 739



‘முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்’
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

இலங்கையில் பிரபல பத்திரிகைகளின்

# சோல் ஏஜண்டுகள்!

●

"சாணக்யா"

சினிமா நடிகைகளின் அந்தரங்க வண்டவாளங்களை
அம்பலப்படுத்துகிறது.

●

தினமணி

தினமணிக் கதிர்

"சஞ்சீவி"

உண்மைக் கதைகள், நிஜப் புகைப்படங்கள்
நிறைந்த மாதப் பத்திரிகை

●

விபரங்களுக்கு:

இந்தியா நியூஸ் மார்ட்

1, பிச்சோஸ்லேன் - கொழும்பு - 11

# பதிப்புரை

அன்பார்ந்த வாசகர்களுக்கு,

வணக்கம்.

"**காமாந்தகாரி**" என்ற இந்த அற்புத உண்மைக் கதையை தமிழ் ரஸிகர்களின் முன் எங்கள் முதல் காணிக்கையாகச் சமர்ப்பிப்பதில், அளவற்ற மகிழ்ச்சியடைகிறோம்; எல்லையில்லாத பெருமையுடன் இதை உங்களுக்கு பரிசாக அளிக்க, எங்களுக்கு பிரசுரிக்க சந்தர்ப்பமளித்த இதன் ஆசிரியரான "**சஞ்சீவி**" **ஸ்ரீ ராஜாராம்** அவர்களை உங்களுக்கு அறிமுகப் படுத்துவது என்ற குற்றத்தைச் செய்வதற்காக அல்ல இந்த முகவுரை. இந்த உண்மை ஓவியத்தை சிருஷ்டித்த ஆசிரியர் "சஞ்சீவி" ஸ்ரீ ராஜாராம் தமிழ் ரஸிகர்களுக்கு "சஞ்சீவி" முதலிய பத்திரிகைகள் மூலம் அறிமுக மானவர்தான். அவ்வளவு நன்றாய் அறிமுகமான ஒருவரின் சிறந்த நூலை பிரசுரம் செய்யும் செல்வன் பிரசுரமும் உங்கள் அபிமானத்தையும் ஆதரவையும் எதிர்பார்ப்பதில் தவறு ஒன்று மிருக்காது அல்லவா?

மே 1951

முதற் பதிப்பு

**செல்வன் பிரசுரத்தார்.**

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

# காமாந்தகாரி

காமாந்தகாரி - இதுதான் இன்றைய உலகம் என்னை அழைக்கும் செல்லப் பெயர். என் பெற்றோர்கள் இட்ட பெயர் போய் - நடுவில் நானாக ஏற்படுத்திக் கொண்டு, புகழை சம்பாதித்த பெயர் போய்——இன்று உலகம் என்னை காமாந்தகாரி என்று ஒரே முகமாய் அழைக்கிறது. ஏன்? என்ற என் கேள்விக்கு பற்பல விருத்தாந்தங்களைக் கூறி அந்தப் பெயருக்கேற்ற சோடனைகளைப் புனைந்து கூறும் இந்த விசித்திர உலகம்! உலகத்தைக் கூறுவானேன். உலகில் அடங்கியுள்ள இந்த ஆண் இனம் என்னை இழிவு படுத்தி அழைக்கிறது என்றே கூறலாம். காமாந்தகாரியாகக் காரணம் யார் என்று அந்த ஆண் இனம் சிந்தித்துப் பார்த்ததானால் என்னை இவ்வாறு எள்ளி நகையாடி அழைக்காது. காமாந்தகாரியாக விளங்குவதற்கு காரணம் பல காமாந்தகாரர்கள் இருந்ததனால்தானே! இதை எண்ணியதா இக்கபோதி உலகம்! உலகம் கபோதி தான் என் வரை! தீரவிசாரியாமல் தீர்ப்புக் கூறுகிறதே!

சிந்தித்துப் பார்த்து சீரான முடிவுக்கு வந்ததா? எண்ணிப் பாராமல் எள்ளி நகையாடுகிறதே! சிந்திக்காமல் சிரிக்கிறதே! அபலையின் கதியைப் பாராமல், ஆராயாமல் அனாவசியமாக வம்படிக்கிறதே! வீண் பேச்சு பேசுகிறதே விகல்பமாக!

நீங்களும் உலகத்தோடு சேர்ந்துதானே சிரிக்கிறீர்கள். உங்களில் ஒருவராவது கொஞ்சமாவது யோசித்

தீர்களா? ஆட்டுக்கும்பலாகவல்லவோ இருக்கிறீர்கள். காமாந்தகாரி நானு? என்ருல் ஆம் என்று ஆமோதிக்கிறீர்களே! பாவம். உங்களைக் குறை கூறி என்ன பயன்? எல்லாம் தெரிந்தவர்களே என்னை இழிவுபடுத்திக் கூறும்போது, ஒன்றுமே தெரியாத உங்களில் சிலர் என்னைப்பற்றிக் குறைவாகக் கூற கேட்பானேன்! காமாந்தகாரி என்ற பெயருடன், என்னுடைய புகழைக் குறிக்கும் பெயரான மஞ்சுபாஷணியையும் தெரியும். நான் ஒரு பிரபல சினிமா நடிகை என்பதும், புகழ் பெற்ற நக்ஷத்திரம் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

என்னைப்பற்றிய சில கட்டுரைகள், விமர்சனங்கள், வாழ்க்கை வர்ணனைகள், மூவர்ண அட்டை போடப்பட்டிருக்கும் சினிமாப் பத்திரிகைகளிலே பளிச்சிடுவதைப் பார்த்திருப்பீர்கள். பேட்டியாளர்கள் என்னை பேட்டி கண்டிருப்பார்கள். இன்னும் எவ்வளவோ, வகையில் என்னை உங்களுக்குத் தெரிந்திருக்கும். நான் என்ன சோப்பு உபயோகிக்கிறேன், நான் எந்த புடவை கட்டிக் கொள்ளுகிறேன் என்பது எல்லாம் உங்களுக்கு சுலபமாகத் தெரிந்துள்ள விஷயங்கள். ஆனால் எனது உண்மை வரலாறு, நான் எப்படி காமாந்தகாரியாக உலகோரால் பழிக்கப்பட்டேன் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. சினிமா உலகை நம்பி, தனது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளும் வருங் கால யுவர், யுவதிகளுக்கு எச்சரிக்கையாக இதைஎழுதுகிறேன்! எனக்கோ வயதாகி விட்டது. நான் 'இல்லை' என்று மறைத்தாலும் நீங்கள் நம்பப்போவதில்லை. ஆதலால் நடந்தது நடந்தபடியே எழுதுகிறேன். எனக்கு இம்மாதிரிப் பெயர்களை வாங்கிக் கொடுத்த புண்ணியவான்களை உங்களுக்கு காட்டுகிறேன். யார், யாரால் நான் காமாந்தகாரியாக்கப்பட்டேன் என்பதை பட்டவர்த்தமனமாகக் கூறுகிறேன். நீங்களே படித்த பிறகு தீர்ப்புக் கூறுவீர்கள். இப்புத்தகம் வெளிவந்தவுடன்

நான் இவ்வுலகை விட்டுப் பிரிந்தவளாகி விடுவேன் ஆகையால் இதில் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், மன விரோதங்கள் எல்லாம் என்னை பாதிக்காது. எப்படிப் பட்ட விரோதமும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. உலகம் எந்த மாதிரி நிலையில், எதை உண்மை என்று நம்புகிறது. எதை நம்பாமல் நழுவவிடுகிறது. என்பதை எல்லாம் எடுத்துக் காட்டவே இதை எழுதுகிறேன். இதனுல் சமூகத்துக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டால் அதுவே நான் அடைந்த பாக்கியம் என என் ஆத்மா கருதும்! எனக்கு வேண்டிய சொத்துக்கள் வீடு, நகை எல்லாம் இருந்தும் என்ன பயன்! உலகம் என்னை ஒரு பரஸ்திரீயாகமதிக்கும்போது! அவைகளையெல்லாம், சினிமாவில் உயிர் விடும் எக்ஸ்ட்ரா சகோதரிகளுக்கு தானம் அளிக்க 'வில்'லை எழுதி வைத்திருக்கிறேன். அதன்படி சர்க்கார் நடக்கும் என எதிர் பார்க்கிறேன். நான் சாகத் துணிந்துதான் இந்த சுய சரிதத்தை எழுதினேன். நான் மரணமடைவதில், யாருக்கும் எந்த தொந்தரவும் ஏற்படாது. இதில் யாருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று முன் கூட்டித் தெரிவித்து விடுகிறேன். "சமூகத்தை சீர்திருத்த வந்தவள் சாகத் துணிவானேன்" என்று நீங்கள் கேட்கலாம். அப்பொழுது நான் பதில் கூற இருக்க மாட்டேன். ஆதலால் அதற்கு பதில் இப்பொழுதே கூறுகிறேன். சுய சரித்திரம் வெளிவந்தவுடன், அதில் கண்ட அனேகருடைய போலி கௌரவம் பாதிக்கப்படலாம். ஆத்திரம் எழலாம். அதன் பயனுக நான் கோர மரணமடைய நேரிடலாம். இதனுல் அவர்களுக்கு துன்பம் நேரலாம். இவைகளைத் தவிர்க்கவே, நான் விஷமருந்தி என் உயிரைப் போக்க முடிவு செய்து அம்மாதிரி செய்து விட்டேன். நீங்கள் என்னை கோழை என்று அழைத்தாலும் அழையுங்கள். ஒருவிதத்திற்கும் பொருந்தாத என்னை 'காமாந்தகாரி' என்று அழைத்த உங்கள்

வாய் கோழை என்று அழைத்தாலும் சரி, கொலேகாரி என்று அழைத்தாலும் சரி, அதைப் பற்றிக் கவலேப் படுபவள் நானல்ல! எனக்குதான் உலகைப் பற்றியே கவலே கிடையாதே. மீளாத நித்திரையல்லவா, நான் விரும்புவது! ம்...விட்டுத் தள்ளுங்கள். இனி என் வரலாறைப் படியுங்கள். கூறுங்கள் தீர்ப்பு! நான் கொலேகாரியா? காமாந்தகாரியா? கோழையா? பேயா? பெண்ணு? நீதியின் சொரூபமா? அநீதித் தாண்டவ மாடும் அக்கிரமக்கார பெண்ணு? என்று.

பிரிய வாசகர்களே! உங்களுக்கு சொல் வித்தை காட்டி பிரமிக்க வைக்க விரும்பவில்லே. அவ்வளவு படித்தவளல்ல. காலப் போக்கில் தமிழை அறைகுறை யாக எழுதக் கற்றுக்கொண்டவள். அவ்வப்போது உந் தப்பட்ட உணர்ச்சியால், சில வார்த்தைகள் எழுதுவது வழக்கம். அதைக் கொண்டு தான் இப்படி கிறுக்க லானேன். இதை மன்னித்து விடுங்கள். என் வாழ்க்கை உங்களுக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்பது என் எண்ணம். அப்படிப்பட்ட தத்துவ ஞானியுமல்ல! தடுமாற்றங்களினுல் உண்டான வாழ்க்கையில் பல தழும்புகளேப்பெற்றவள். அனுபவம்தான் நீதிக்கு துணே செய்கிறது. என்பது என் எண்ணம். அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது.

காமாந்தகாரியின் வாழ்விலே காமமும், காதலும் மட்டும் இல்லே. கண்ணீர் வரும் கட்டங்களும், அனுதா பப்படக்கூடிய கட்டங்களும் ஆச்சரியம் உண்டாக்கக் கூடிய, சம்பவங்களும் அடங்கியுள்ளன என்பதை அறிந்து கொள்ளுங்கள். சிந்தியுங்கள் நண்பர்களே! சிந்தியுங்கள்.

### எனது பூர்வீகம்

நான் பிறந்தது மதுரையிலே! என் தாய் தந்தை யார் இட்ட பெயர் மீனுக்ஷி. மதுரைக்கு பெருமையளிக்

கும் புனிதமான பெயர். ஆனல் அப்புனிதப் பெயருடன் இன்று நான் உலவி வந்தேனனல், அப்பெயருக்கு எப்படிப்பட்ட கௌரவம் கிடைத்திருக்கும். பெண் வர்க்கத்தினருக்கே அந்தப் பெயரைக் கண்டாலே எவ்வளவு வெறுப்பு எழும். நல்ல காலம். சினிமா உலகம் இம்மாதிரி பழங்கால, தெய்வத்தன்மை பொருந்தியதை மாற்றியமைத்து விடுகிறது. இது வரவேற்கத் தகுந்ததே! இல்லாவிட்டால் சாவித்திரி, சீதை, இம்மாதிரி பதிவிரதாத் தன்மையுடைய பெயர்கள் இன்னும் எவ்வளவோ கீழ்த்தரமான அர்த்தங்களை உடைய உருவங்களாகவல்லவோ மாறிப் போயிருக்கும்.

நான் நாயுடு வம்சம் என்று சொல்லப்படும் குலத்திலே உதித்தேனும். இதை நான் அவ்வளவாக பொருட்படுத்துவது கிடையாது. வாழ்க்கை வர்ணனை எழுதும் பத்திரிகை ஆசிரியர்கள் விடாப்பிடியாக எப்படியோ, இத்தகைய அர்த்தமற்ற பூர்வாங்கங்களை கேட்டு நான் கூருமற் போனலும் எழுதி விடுகிருர்கள்.

குழந்தைப் பருவம் மதுரையிலேயே கழிந்தது. என் தகப்பனர் கைத்தறி நெசவு செய்து ஏதோ ஜீவனம் நடத்தி வந்தார். இருப்பதைக் கொண்டு எப்படியோ ஒப்பேற்றி வந்தார்கள் என் பெற்ருேர்கள். எனக்கு வயது ஆறு இருக்கும் எனது தகப்பனர்பேரில் வீண் சந்தேகங்கொண்டு, முதலாளி வேலை கொடுக்காமல் எங்கள் குடும்ப வருவாயை கெடுத்து விட்டார். நாளடைவில் குடும்பம் மிகவும் கஷ்ட தசையில் நடந்து வந்தது. ஒரு சில வருஷங்கள் இப்படி காலங் கழித்து வந்தோம், வேதனை உள்ளத்துடன், வாழ்க்கைப் பாதையில் பல கரடுமுரடான சம்பவங்கள் என் தகப்பனரை பித்தனக்கி விட்டது. ஊராரின் ஏசலுக்கும், மற்றவைகளுக்கும் இலக்கானர். ஆனல் அந்த வாழ்வு நீண்ட காலம் இல்லை. விரைவிலேயே, அவர், தற்செயலாய் ஒரு

கிணற்றில் விழுந்து அதன்பயனாக இப்பூலோக வாழ்வை நீத்து விட்டார். விதவையான என் தாய், ஒரே மகளான என்னை வளர்க்க வேண்டிய பணியில் மும்முரமாக கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டாள். மதுரையிலே பிழைப்புக்கு வழியில்லாத அவள், கஷ்டப்பட்டுசேர்த்து வைத்திருந்த சிறிது துகையுடன் சென்னையை நோக்கி வந்து விட்டாள். சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் இறங்கிய அவள் நேராக மயிலைக்குச் சென்ருள். அங்கே ஒரு வக்கீல்வீட்டில் வேலைக்கமர்ந்தாள். குடியிருக்கவோ இடம் இல்லை. வக்கீல் வீட்டின் ஒரு ஒதுப்புறத்திலே எங்கள் இருவரின் சலடங்களும் இராக்காலத்தில் கிடக்கும். வக்கீல் வீட்டு குழந்தைகளுடன் சில காலம் விளையாடி காலம் கழித்துவந்தேன். தாயின் வேதனை எனக்கு சிறிதுகூட தெரியாது. எனது தாய்க்கு என்னை எப்படியாவது படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. என்னை மிகவும் கஷ்டப்பட்டு பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள். இரண்டு வருஷ காலம் நான் பள்ளியில் சேர்ந்து படித்தேன்! ஆனல் என் வாழ்க்கை இப்படி எல்லாம் இருக்க வேண்டுமே! வாழ்விலே சோதனை ஏற்பட்டது. தற்செயலாக வக்கீல் வீட்டு குழந்தையின் தங்கச் சங்கிலி ஒன்று காணமற் போய் விட்டது. அதைத் திருடியவள் என் தாய் என்ற ஒரு குற்றச்சாட்டு எல்லோராலும் சாட்டப்பட்டது. திட்டுக்களுக்கும், அடிதடிகளுக்கும் உள்ளானுள் என் தாய் வீட்டை விட்டு விரட்டப்பட்டாள். பிறகு சங்கிலி எங்கோ மூலையில் கிடந்ததாக செய்தி எட்டிற்று.

வீட்டைவிட்டு விரட்டப் பட்டாள் என் தாய். சம்பளம் கட்டாமையால் பள்ளிக்கூடத்தை விட்டு விரட்டப்பட்டேன். இருவர் உள்ளங்களும் வெவ்வேறு திசையில் தடுமாறின. தாய்க்குப் பாரமாக நாமிருக்கிறேமே என்று நான் அப்பொழுது எண்ணினேன். என்னதான் என்தாய் எண்ணிஞளோ எனக்குத் தெரியாது.

மயிலையிலிருந்து ஜார்ஜ்டவுன் பக்கம் சென்றோம். அங்கு ஒரு வீட்டில் பழையபடி வேலைக்கமர்ந்தாள் என் தாய். ஆனால் திடீரென்று நான் எந்தப் பள்ளிக்கூடத்தில் சேருவது ?

ஏதோ வாழ்க்கை நடந்து வந்தது. பக்கத்திலே ஒரு குடிசையிலே வாழ்ந்து வந்தோம். வருஷங்கள் உருண்டோடின! படிப்பு அவ்வளவுதான். அங்கே ரிக்ஷாக்காரர்கள் கூட்டம் உண்டு. வண்டிகளை அங்கே நிறுத்திவிட்டு சவாரிக்காகக் காத்திருப்பார்கள்!

வருஷங்கள் உருண்டோடினதில் தாய்க்கு வயோதிகம் ஆயிற்று! எனக்கு வாலிபப் பருவம் வந்தடைந்தது! தாய்க்கு என்னைப்பற்றிய கவலை அதிகமாகிவிட்டது! என்ன செய்வாள் ஏழை! அடிக்கடி பார்த்து 'எவனுக்காவது, கட்டிக் கொடுத்திடணும்' என்றுதான் கூறுவாள்! ஆனால் செயலில் அதைக் காட்ட பணம் வேண்டுமே!

ஒருநாள், தாயும் நானும், குடிசையின் முன்பக்கம் உட்கார்ந்துகொண்டிருந்தோம். நான் 'பெரிய மனுஷி' யாகி ஒரு மாத காலமிருக்கும். ரிக்ஷாக்கார சின்னான் வண்டியைக் கொணர்ந்து நிறுத்தினான்! அவ்வண்டியில் ஒரு உருவம் இருந்தது என் கண்ணுக்குப் புலப்பட்டது! ஏதோ என்னமோ என்றுதான் நினைத்தேன். தாயை அழைத்தான் சின்னான். ஏதோ குசுகுசுவெனப் பேசி, வண்டியை இழுத்துக்கொண்டு போனான். என் தாய், நடையும் ஓட்டமுமாக வந்தாள்.

"மீனாச்சி, உள்ளே வாயேன்' என்று அழைத்தாள். சரேலென்று எழுத்து உள்ளே போனேன். தாய் என்னைக் கட்டிக்கொண்டு கோவெனக் கதறி விட்டாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை" "ஏம்மா? ஏம்மா?" என்று கேட்டேன்.

"நான் என்ன செய்வேண்டி கண்ணு. என் வவுத்துலே பொறந்தியே" என்று மீண்டும் கதறி அழ ஆரம்பித்து விட்டாள். விக்கலுக்கிடையே, அவளுடைய எண்ணத்தைக் கூறினாள். விபரீதமாகப்பட்டது. என் தலையே சுற்றியது. உலகமே இருண்டு விட்டதுபோன்ற உணர்ச்சி. அப்படியே தாயின்மேல் சாய்ந்து விட்டேன். உலகில் எல்லோரும் உதாசீனமாகப் பேசக்கூடிய தொழில்தான். ஆனால் அதே தொழில் வெற்றி பெற்று விட்டால் புகழ்மாலை சூட்டவும், புனிதவதி என்று கூறவும் தயாராகவும் இருக்கிறது உலகம் என்ற உண்மையும் எனக்கு புலப்படத்தான் செய்தது! மனப் போராட்டம் வெகு நேரம் நடைபெற்றது,

'சரி. அம்மா' என்று ஒப்புக்கொண்டு விட்டேன். இருக்கிற ஆகாரத்தை ஆளுக்கொருவாயாக சாப்பிட்டோம். எனக்கு சாப்பிடவே தோன்றவில்லை. எரிந்து கொண்டிருந்த விளக்கின் துடிப்பு, என் இருதயத் துடிப்பின் வேகத்தை பன்மடங்கு அதிகமாக்கியது.

"டணர்' என்ற சப்தம் என் சிந்தனையைக் கலைத்தது. பரபரவென்று எழுந்து கைகால்களை அலம்பிக்கொண்டேன். தாயார் வாயிற் பக்கம் சென்றாள். சிறிது நேரத்துக்கெல்லாம் வண்டியில் உட்கார்ந்திருந்த உருவத்துடன் உள்ளே குனிந்து வந்தாள். அங்கே கிடந்த சுருட்டிக்கொண்டிருந்த ஓலைப்பாயை விரித்துப்போட்டு விட்டு, தட்டிக் கதவை சாத்திக் கொண்டு வெளியே போட்டுவிட்டாள்.

## முதல் அனுபவம்

நின்றிருந்த உருவம் உட்கார்ந்தது; இனி அது, என்று கூப்பிடவேண்டாம். அவர் என்றுதான் அழைக்க வேண்டும். அசட்டுச் சிரிப்புடன் தன்னுடைய கழுகுக்கண்களால் என்னை ஏற இறங்கப்பார்த்தார். நான் வெட்கமடைந்தவளாகத் தலையைக் கவிழ்ந்து திரும்பிக் கொண்டேன். "ஏன் நிக்கறே

சும்மா உக்காரு'' என்றார். பேசாமல் நின்றேன். ''அட என்ன இப்படி வெட்கப் படறியே! எல்லாம் போகப் போக சௌகரியமாய் போய்டும்'' என்று லபக், கென்று என் கையை பிடித்திழுத்தார். இழுத்தவேகத்தில் அவர் மடியின் மீதுபோய் விழுந்தேன். ஆயிரம் தேள்கொட்டி, அது இன்ப வலியாக இருக்குமானால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. மீண்டும் ஒரு முறை இருள் கவிந்தது போன்ற நினைப்பு, இதயம் படபடத்து உடல் முழுதும் ஏதோ ஒருவித விவரிக்க முடியாத உணர்ச்சி, இன்ன தென்று வருணிக்க முடியாதது. என்னை ஊமையாக்கியது. அவர் கைகள் என் தோள்பட்டைகளை முதலில் இறுகப் அமுக்கிப் பிணைத்தது. அடுத்த கணம் அவர் முகம் என் முகத்தின் அருகே! அவரது உதடுகள் என் உதடுகளை கவ்வின.

இன்ப லாகிரியின் எல்லையிலா ஆனந்தம்! அவரது கைகள் மெள்ள என் மார்பகங்களிடம் வந்தது. அவ்வளவுதான். வெடித்து விடுவது போன்ற உணர்ச்சி. விம்மி விம்மி எழுந்தன. இருதயம் பிளந்து விழுவது போன்ற! இன்ப வேதனைதான், தாளமுடியவில்லை. அவரது மார்பகத்துடன் இறுகப் பிணைந்து கொண்டேன். அப்படியே என்னை படுக்கவிட்டு, தானும் அருகேபடுத்தார். காற்று பலமாக அடிக்க ஆரம்பிக்கவே, விளக்கு அணைந்தது. இருள் சூழ்ந்தது! மேகத்திரை விலகியது! சந்திரனைக்காண அவருக்கு துடிப்பு! எனக்கும் அப்படியே! இன்னும் என்ன சொல்வது' அனற் காற்றிலே சந்தணம் பூசிக்கொண்டது போன்ற பிரமை. இன்ப வெள்ளத்திலே நீந்தியது போன்ற உணர்ச்சி. சிறிது நேரம்தான்!

ஏறியலை அடங்கியது. புயல் ஓய்ந்தது! என் உணர்வு சற்று தணிந்தது! எவ்வளவு நேரம் அப்படியிருந்தேனோ எனக்குத் தெரியாது. விடியும் சமயம்

மெள்ள கண்ணைத் திறந்து பார்த்தேன். அலங்கோலமாக படுத்திருப்பதை உணர்ந்தேன். எனது ஆடைகள் இடம் மாறி விலகியிருந்தன. என்ன செய்வதென்றே தோன்றவில்லை. பக்கத்தில் பார்த்தேன். ஒருவரையும் காணோம். ஒரே அசதி. ஆனால் ஒரு திருப்தி. மனம் நிம்மதியாக இருந்தது. அன்று இரவு நடைபெற்ற சம்பவத்தை எண்ணி, மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டாலும், இன்பத்தின் ஸ்பரிசத்தை அடைந்ததில் ஒரு மகிழ்ச்சி.

சிறிது நேரத்திற்கெல்லாம், தட்டிக் கதவைத் திறந்து கொண்டு, தாயார் வந்தாள். நான் எழுந்து உட்கார்ந்தேன். தாய் என் அருகில் வந்து உட்கார்ந்து என்னைத் தடவிக்கொடுத்தாள். சிறிது நேரம் மௌனமாக இருந்தோம். என்னைப் பார்த்து, "கண்ணு என்னம்மா செய்றது. எவனையாவது பார்த்து கட்டிக் கொடுத்தடலாம்னுதான் நினைச்சேன். நம்மப் போறாத வேளை இப்படியெல்லாம் ஆயிடுத்து. ஆனா அதிலேயும் ஒரு நல்ல சந்தர்ப்பம்" என்றாள். "என்னம்மா அது? நேத்து வந்தாரே, அவரு யாரு?" என்றேன்.

"ரிக்ஷாக்கார சின்னனை ரொம்ப நாளா என் கிட்டே ஒன்னைப் பத்தி அடிக்கடி விசாரிச்சிகிட்டிருந்தான். நான் மொதல்லே இம்மாதிரி காரியத்துக்கெல்லாம் சம்மதிக்கலே. ஆனா அவரு சினிமா படம் புடிக்கற கம்பெனியிலே மானேஜராம். எப்படியாவது சினிமாவிலே சேர்த்துடுவாரு! அப்புறம் அதிருஷ்டம் அடிக்க ஆரம்பிச்சுட்டா கேழ்க்கவே வேண்டாம். கோடி வீட்டு கோவிந்தம்மாகூட இவராலேதான் இப்படி பெரிய பணக்காரியாயிட்டாளாம் அதனாலே நானும் சம்மதிச்சுட்டேன். என்ன செய்றது. நம்ம காலந் தள்ளணுமே! கெட்டுப் போயிட்டாலும் பலனோடே கெடணும். சும்மா பேரைக் கெடுத்துகிட்டு, தெரு

தெருவா சுத்தறதுலே என்னு பிரயோஜனம் ?'' என்று மூச்சு விடாமல் கூறினுள்.

என் மனம் கற்பனை உலகிலே பறக்க ஆரம்பித்து விட்டது. எண்ணுத எண்ணம் எல்லாம் எண்ணி னேன். அந்த உலகம் இன்னதென்றே அறியாத எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கியது என்ருலும், அதை நினைக்க நினைக்க 'திக்' கென்றுதான் தோன்றியது. நாளையே ஊராரின் ஏசலுக்கு ஆளாக வேண்டுமோ என்று எண்ணினேன். என்னதான் வாழ்வு வந்து விட்டால் நமது நிலையைப் பற்றிக் குறை கூறிக்கொண்டேதானே இருப்பார்கள். இதே ரிக்ஷாக் கார சின்னுன் மட்டும் சும்மா இருப்பானு! "கழுதே கால் ரூபாய்க்கு லோல் பட்டது" என்று தெரிந்தவன் போலதானே கதை கட்டிப் பேசுவான் என்றெல்லாம் சிந்தித்தேன். ஆனுல் கொஞ்சம் அதிருஷ்டம் இருந்து பணமும் சேர்ந்து விட்டால் அறிவு வந்து விடும். எதைச் சொன்னுலும் கேட்கும் எதுவும் நடக்கும். உலகம் புகழும் இதெல்லாவற்றையும் எண்ணியது என் மனம். என் தாய் எழுந்து முகம் கழுவ, காலை ஆகா ரத்திற்கு வேண்டிய வேலையிலும் ஈடுபடலானுள். அன்று கொஞ்சம் தடபுடலாகவே எல்லாம் வாங்கி வந்து சமையல் செய்யலானுள். பேச்சோடு பேச்சாக "அவரு இன்னிக்கும் வருவாரு. இதமா நடந்துக்கோ" என்று உபதேசம் செய்தாள். நானும் சரி என்றேன். இரவு நெருங்கியது. அதே ரிக்ஷாக்கார சின்னுன் அவரை ஏற்றிக் கொண்டு வந்தான். அவரும் உள்ளே நுழைந்தார். நன்ருக வாரி விடப்பட்ட கிராப். அழ கான உருவம்தான். சிகரெட் ஒன்றைப் பற்ற வைத் துக் கொண்டே வந்திருந்தார். ஒரு பை நிறைய ஏதேதோ வாங்கி வந்திருந்தார். சிறிது நேரத்திற்கெல் லாம், தாயார் சாப்பிட்டு விட்டு, என்னைச் சாப்பிடச் சொல்லி விட்டு வெளியே போனுள் படுக்கும் பாயுடன்.

நான் மட்டும் நின்று கொண்டிருந்தேன். அவர் சுற்று முற்றும் பார்த்தார். நான் குறிப்பறிந்து பாயை போட்டு விட்டு நின்றேன். அவர் அருகே வந்து, என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கன்னத்தோடு கன்னம் சேர்த்து, கடைசியில் இதழுக்கு இதழ் வந்து விட்டார். என்னை;தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டார். மெள்ள அப்படியே உட்கார்ந்தோம். "நான் சாப்பிட்டு வரேன்" என்று எழுந்திருக்க ஆரம்பித்தேன். "அது கிடக்கட்டும் இதோ" என்று அந்தப் பையிலிருந்து தின்பண்டங்கள் சிலவற்றை எடுத்து என்னிடம் நீட்டினார். நான் தயங்கினேன். அவரே வலுவில் எனக்கு ஊட்டினார். அவரது கரங்களின் ஸ்பரிசத்தோடு, தின்பண்டங்களின் ருசியும் சேர்ந்து என்னை திக்குமுக்காடச் செய்தன.

அன்று காற்று விளக்கை அணைக்க உதவியது. இன்று நான் ஏற்றுக் கொண்டேன். விளக்கை ஊதி அணைத்தேன். குடிசையிலுள்ள சந்துகளின் மூலம் சிறிது நிலா வெளிச்சம் மட்டும் மங்கலாகத் தெரிந்தது; அவரும் நானும் படுத்தோம். என்னை அணைத்தவாறே என் வரலாற்றை விசாரித்தார். நானும் கூறினேன். அவர் அனுதாபப்பட்டு, தான் வேலை பார்க்கும் சினிமா கம்பெனியில் என்னை எப்படியாவது சேர்த்து விடுவதாகவும், இனி இந்த குடிசையில் இருக்க வேண்டாமென்றும், சீக்கிரத்திலேயே வேறு இடம் பார்த்துத் தருவதாகவும் கூறினார். நானும் சம்மதித்தேன். இன்ப உணர்ச்சி ஒவ்வொரு வினாடியும் எங்கள் உடலில் பரவிக் கொண்டிருந்தது. உணர்ச்சி உச்ச நிலையடைய, எங்கள் செய்கைகள் இயங்கிக் கொண்டிருந்தன. அவரது அங்கங்கள் என் அங்கங்களிடம் செய்தி ஏதோ கூறின. ஒவ்வொரு கணமும் இன்பப் போதை ஏற்றிக் கொண்டிருந்தன அவரது உதடுகள். அவரது அகன்ற மார்பிலே என் மார்பு பதிந்து. அதனுள் சென்று

லயித்து விடமாட்டோமா என்ற எண்ணத்தில் இறுக அணைந்திருந்தது. எனது மார்பு, அடங்கி, விம்மி எழுவதில் ஏற்படும் இடைவெளியைக்கூட விரும்பாமல் அவர் என்னைச் சேர்த்து சேர்த்து அணைத்துக் கொண்டார். உணர்ச்சியில் ஈடுபட்டிருந்த இரு உள்ளங்களும் உடலில் இன்பத்தின் எல்லையைக்காண விரும்பின. அதற்கான ஆயத்தங்களை எங்களையும் அறியாமல் செய்து கொண்டோம். அப்ப. விவரிக்க முடியாத உணர்ச்சி. ஆண்மையும் பெண்மையும் கூடும்போது! பட்டு மெத்தையிலே படுப்பது போன்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். முன் இரவு நடந்த அதே சம்பவங்களும் உணர்ச்சிகளும் மாறி மாறி எழுந்தன. அதே அசதி. ஆனால் சிறிது நேரந்தான். மௌனமாக படுத்திருந்தோம். எங்கள் இதயங்கள் என்னென்னவோ பேசிக் கொண்டன. சிறிது நேரத்துக்கெல்லாம் நானே அவரை, இன்ப லோகத்துக்கு மீண்டும் அழைக்கத் துணிந்தேன். அவரும் சரி என்று சம்மதித்தார். அவர் உடலை என்வசம் விட்டு விட்டார். என் இஷ்டப்படி அவரை உபயோகப் படுத்திக் கொண்டேன் நான் ஆட்டுவித்தபடி அவர் ஆடினார். பம்பரம் போல! அவரை அப்படி செய்ய வைத்ததில் எனக்கு அளவிலா மகிழ்ச்சி ஏற்பட்டது!

உணர்ச்சி வேகத்தில் அவருக்கு சில சமயம் உபத்திரவம் உண்டாயிற்றோ என்னவோ எனக்குத் தெரியாது! கொஞ்ச நேரம் சென்றதும் தாக மெடுக்கிறது என்றார். நான் உடனே அவரை விட்டு விலகி தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன். 'பாலில்லையே பரிவுடன் கொடுக்க, அவ்வளவு பணக்காரியாக இல்லையே!' என்று எண்ணினேன். அதைக் கூறவும் கூறினேன். "பரவாயில்லை. இனி தண்ணீர் கொடுக்க வேண்டியிராது" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். தண்ணீரை வாங்கி குடித்துவிட்டு படுக்கையில் சாய்ந்தார். நானும்

கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு, அவர் அருகில் சென்று படுத்தேன். விடியும்வரை எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. காலையில் என் தாயார் கூப்பிட்டது தான் தெரியும். நான் அலறிக்கொண்டு எழுந்தேன். அவரைப் பார்த்தேன். நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அந்த அமைதி முகத்திலேயும் ஒரு வசீகரம் காணப்பட்டது. அவர் அருகில் சென்று முத்தம் ஒன்று கொடுத்தேன். அவர் மெள்ளக் கண் விழித்து விடிந்து விட்டதோ என்றார். 'ஆமாம் கண்ணு' என்றேன் என்னையுமறியாமல்! படுக்கையை விட்டு எழுந்தார். தாயார் கதவைத்தட்டவே கதவைத் திறந்தேன்! ஓப்புக்குத்தான்! அவளுக்குத் தெரியாத ரகசியமா என்ன? என் கணவர் (சீ தாலி கட்டினவன் என்ற நினைப்பில்) அந்த மனிதர் எழுந்து சட்டை போட்டுக் கொண்டு, கிளம்பி விட்டார். நானும் தலையசைத்து விடை கொடுத்தேன்.

இப்படியாக சில நாட்கள் இன்பகரமாக கழிந்தன. ஒரு நாள், காலை மணி பத்திருக்கும். ஒரு கார் வந்து நின்றது. அவரும் அதில் வந்திருந்தார். வீட்டினண்டை வந்து 'மீனுக்ஷி, உடனே கிளம்பு! பெரியம்மா சாமானையெல்லாம் கட்டி வச்சுக்குங்கோ, இந்த பத்து ரூபாய் வச்சுகிட்டு, அக்கம் பக்கத்திலிருக்கிற கடனை கொடுத்திடுங்க. சாயங்காலம் வர்ரேன். வேறு இடம் பார்த்தாச்சு' என்று பரபரவென்று கூறிவிட்டு எனக்காக காத்துக் கொண்டிருந்தார். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்தான் ஒரு புடவை வாங்கிக் கொடுத்திருந்தார். அதைக் கட்டிக் கொண்டு, காரில் ஏறி உட்கார்ந்தேன். கார் ஏறுவது அதுதான் முதல் தடவை. சுற்றியிருந்த குடிசையிலிருந்தவர் எல்லாம் ஒரே ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வண்டி, புழுதியைக் கிளப்பிக் கொண்டு கிளம்பியது! என் மனம் விவரிக்க முடியாத இன்பத்தில்

திகைத்தது. என் தாயார் வண்டி மறையும்வரை பார்த்துக் கொண்டே இருந்தாள். வண்டி, நகரின் பல பாகங்களைக் கடந்து ஒரு பங்களாவின்முன் நின்றது. அவர் இறங்கினார். என்னையும் இறங்கச் சொன்னார்.

கார் பங்களா வாசலை அடைந்ததும் காரில் உட்கார்ந்தவாறே, கட்டிடத்தை உற்று நோக்கினேன். பெரிய மாடிக் கட்டிடம்தான். 'சொர்க்கா பிக்சர்ஸ்' என்று ஒரு போர்டு போடப்பட்டிருந்தது. கார் கதவை அவர் திறந்து விட்டார். நானும் வண்டியை விட்டு இறங்கி அவரைப் பின் தொடர்ந்தேன். நடுவிலேயுள்ள ஒரு பெரிய ஹாலுக்குச் சென்றோம்.

குறுக்கேயும் நெடுக்கேயும், சல்லாத்துணியணிந்து மார்பகங்கள் வெளியேதெரிய, ஒருபுறம் மேல்சேலையை விலக்கிவிட்டுக் கொண்டு, சில வாலிபப் பெண்கள் கண்களில் தீட்டிய மையுடன் 'களுக்' 'களுக்' கென்று சிரித்துக்கொண்டு குதித்து, கும்மாள மடித்துப் போய்க் கொண்டிருந்தனர். சிறிதுகூட வெட்கமே இல்லாதவர்கள் மாதிரி இருந்தது அவர்கள் செய்கை. எனக்கு என்னமோபோலிருந்தது. பாவம். அவர்கள் வாழ்க்கை அப்படி. ஏதாவது உணர்ச்சி இருந்தால்பாவம். அவர்கள் எத்தனை கஷ்டங்களை அனுபவித்து, இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு வந்தார்களோ என்றெல்லாம் என் மனம் எண்ணியது.

மானேஜர், "இவர்களைப் போலத்தான் நீயும் சந்தோஷமாக இருக்க வேண்டும்." என்று கூறி, அந்தப் படத்தில் நடிக்கும் உப நடிகைகள் எனக் கூறினார். சிறிது நேரத்துக்கெல்லாம், நான் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கே ஒரு அறை. குளிர்ந்த காற்று வீசியது. மின்சார விசிறி வேறு சுழன்றுகொண்டிருந்தது. நாற்காலியிலே ஒரு வயதானவர், நடுத்தர வயதி

னர்; சில்க் ஜிப்பா அணிந்து கொண்டு, தங்கச் சங்கிலி போட்ட கைக்கடியாரம், விரலில் மோதிரங்கள் சகிதமாக உட்கார்ந்திருந்தார். எதிரே, ஒரு டின்னில் சிகரெட்டுகள் இருந்தன. அதிலிருந்து ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார். மானேஜர், என்னை அறிமுகப்படுத்தினுர். என்னைக் கைகாட்டி, ஒரு நாற்காலியில் உட்காரச் சொன்னுர். அப்ப! எப்படிப்பட்ட ஆசனம். உட்கார்ந்த என்னை தூக்கிப் போட்டது. வர, வர, அது ஸ்ப்ரிங் வைத்த நாற்காலி என்று தெரிந்து கொண்டேன். அவர் தான் முதலாளி என்று தெரிந்துகொண்டேன். என்னைத் தனியே, அழைத்துச் சென்றுர் மானேஜர். பிறகு என்னிடம் பரிவாக அவர் கூறினுர். "நான் உனக்காக இன்னும் எவ்வளவோ செய்யக் காத்திருக்கிறேன். உன்னைக் கெடுக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. அவர் தான் முதலாளி என்று நான் சொல்லாமலே நீ தெரிந்து கொண்டிருப்பாய். அவர் இஷ்டப்படி நடந்துகொண்டாயானுல், உன்னை எப்படி எப்படி எல்லாமோ ஆக்கிவிடுவார். அவரால் முன்னுக்கு வந்தவர்கள் எத்தனையோ நக்ஷத்திரங்கள். நீ நல்ல வாழ்வு வாழ வேண்டுமென்பதற்காகவே உன்னை இப்படிச் செய்யச் சொல்லுகிறேன். இதெல்லாம் உனக்கு விசித்திர சம்பவங்களாகத் தோன்றலாம். எதிர் காலத்தை நீ நினைத்துப் பார். நீ பட்ட கஷ்டங்களை கொஞ்சம் நினைத்துக்கொள். வருங்காலத்தில் நீ நிச்சயம் பணக்காரியாவாய்; அப்பொழுது இந்த வாழ்வை மட்டும் மறந்து விடாதே! இதமாக நடந்து கொள்'' என்று உபதேசித்தார். ஆம். உபதேசித்தார் என்றுதான் சொல்ல வேண்டும். அதைக் கடைப்பிடித்திருந்தால் நான் மீண்டும் இந்தக் கதியை அடைந்து, இந்த வரலாற்றை எழுத வேண்டி வந்திராது.

அவர் கூறினுர். நான் கேட்டுக்கொண்டேன். சிறிது நேரத்துக்கெல்லாம், அவர் என்னைப் பிரிந்து கீழே

போய்விட்டார். நான் மீண்டும் முதலாளி அறைக்குப் போனேன், எனக்காக, காபி வரவழைக்கப்பட்டிருந்தது. காபி குடிக்கச் சொன்னார் முதலாளி. காபி குடித்தேன். சிறிது நேரம் என் பூர்வாசிரமத்தையெல்லாம் விசாரித்தார். அனுதாபப் பட்டு என்னை எப்படியாவது முன்னுக்கு கொண்டு வருவதாகக் கூறினார். நானும் நன்றி செலுத்தினேன்.

என்னை அடுத்த அறைக்கு அழைத்தார். இயந்திரம் போல் இயங்கி. அவரைப் பின்பற்றினேன். அடுத்த அறைக்குச் சென்றேன். என்ன சொல்வது! இந்திரனுடைய அறை என்றுதான் சொல்ல வேண்டும். எங்கு திரும்பினாலும் ஒரே கண்ணாடி மயம், வாசனை சொல்ல முடியவில்லை. அவர் போட்டுக்கொண்டிருந்த 'சென்ட்'டு தானோ அல்லது அந்த அறை முழுதும் பன்னீர்தான் தெளித்திருந்தார்களோ! மின்சார விசிறி. அழகழகான விளக்குகள். அலங்கரிக்கப்பட்டிருந்த கட்டில். அதில் திண்டுகளும் மெத்தையும். என்னை உட்காரச் சொன்னார். உட்கார்ந்தேன். கதவைத் தாளிட்டார். 'ஏன்.... நான் போக வேண்டும்?' என்றேன். தழுதழுத்த குரலில் "போக விடவா, உன்னை அழைத்து வந்தேன். ஏன் பயப்படுகிறாய்? அவன் சொல்லியிருப்பானே" என்று சொல்லிக்கொண்டே என் அருகில் வந்து உட்கார்ந்தார் எனக்கு பயமாக இருந்தது. ஒரு ஆடவன் சுகமும் அறியாத எனக்கு மானேஜரின் நட்பு, அதற்கு அஸ்திவாரக் கல் போட்டதுபோலிருந்தது. ஆனால் அஸ்திவாரம் போட்டவரே கட்டிடம் கட்டுவார் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு தவறு என்று அப்பொழுதுதான் புலப்பட்டது! கட்டிடம் கட்ட வேறு ஆள்! இவராவது அப்படி இருந்தால் தேவலை. கட்டிடம் பூர்த்தியாவதற்குள் எவ்வளவு நபர்கள் வருவார்களோ! என்று நினைத்தது என் மனம்.

அருகில் வந்தவர், என் தோள்களைப் பிடித்து தன் பேரில் சாய்த்துக் கொண்டார். என்னை விடுவித்துக் கொள்ள எவ்வளவோ விரும்பினேன். ஆனால் அவர் பிடி அவ்வளவு கெட்டியாக இருந்தது. பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டேன்; எதிரே இருந்த கண்ணாடியில் தெரிந்த என் முக மாறுதலை கவனித்துக்கொண்டிருந்தார் போலும்! சடக்கென என் முக மாறுதலை நானும் கவனித்துக் கொண்டு மாற்றிக்கொண்டேன்.

**அவர் சிரித்தார் நான் சிரித்தேன்.**

"பயப்பட ாதே. நான் உனக்கொன்றும் தீங்கிழைக்க மாட்டேன். நீ மட்டும் எனக்கு இசைந்து விடு; பாவம்-புதுசு பயப்படுவதில் தவறில்லை...... வா கண்ணே" என்று நாக்குழற தழுதழுத்த குரலில் இன்னும் ஏதேதோ கூறினார். நான் கண்களை மூடிக்கொண்டு அவர்மேல் சாய்ந்திருந்தேன்...அப்படியே என்னைக் கட்டிலில் படுக்கவிட்டு, அவரும் சாய்ந்தார். அவரது செய்கைகள் படிப்படியாக என்னை இச்சைக்குத் தூண்டி நானும், லாகிரியில் ஈடுபட்டவளானேன். அவருக்கு நான் இன்பளித்தேன். உன் பெயர் என்ன மறந்தவர் போல் கேட்டார். மீனாக்ஷி என்றேன். "சே. சே... பழங்காலப் பெயர். இனி நீ மஞ்பாஷினிஎன்றார். பெயரும் அழகாக இருந்தது. நானும் தலையசைத்தேன்...சிறிது நேரம் அப்படியே இருந்தோம். பிறகு ஆடைகளை சரி செய்து கொண்டு, தலையை வாரிக்கொண்டு, நான் அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தேன். அவரும் என்னைப்பின்பற்றி வந்தார். நாற்காலியில் உட்கார்ந்தேன்..." இன்னிக்கு நாள் நன்றாக இல்லை. நாளை காண்டிராக்ட் எழுதிப்போம் இந்தா செலவுக்கு இப்ப வச்சுக்க "என்று ஒரு நூறு ரூபாய் நோட்டை என்னிடம் நீட்டினார்..." உம்...வாணும் ... ஒரு ஐந்து ரூபாய் இருந்தா போதும்" என்றேன்....அவர் கடகட என்று சிரித்து விட்டு, "பைத்தியம். உனக்கு அஞ்சு

ரூபாய்இங்கே அரைதம்படிக்குச்சமானம்'' என்று, என் கையில் நூறு ரூபாய் நோட்டை வைத்து கையை மூடச் செய்தார். மறுபடியும் பெல், அடித்து காபி தருவித்துக் கொடுத்தார். என்னைக்கீழே மானேஜரிடம் கூட்டிக்கொண்டு போய் வீட்டில் விடச்சொல்லி விட்டு இரவு கூட்டி வரச்சொன்னார். பையன் முன்னே போக, நான் விடை பெற்றுக்கொண்டு கீழே இறங்கினேன்.கீழேஇறங்கினதும், மானேஜர் அறைக்குசென்றேன். அவர், என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "புத்திசாலியாக நடந்து கொண்டாயா?'' என்று கேட்டார். ஆனால் அந்தக் குரலில் ஒரு சந்தோஷக்குறியில்லை சோகபாவம்தான் காணப்பட்டது. நானும் கண்களில் நீர் துளிர்க்க, "ஆமாம்நடந்து கொண்டேன் உங்கள் உபதேசப்படி'' என்றேன். அவர் புன்னகை செய்தார். வரவழைத்துக்கொண்டார் என்றே கூறலாம். பிறகு என்னைக் காரில் ஏற்றிக்கொண்டு, புதிதாக ஏற்பாடு செய்திருக்கும் வீட்டுக்கு அழைத்துச் சென்று என்னை விட்டு விட்டார். என்ன ஆச்சர்யம்! என் தாயாரையும், சாமான்களையும் எப்படியோ, நான் முதலாளியுடன் பேசிக்கொண்டிருக்கையில் இங்கே கொண்டுவந்து சேர்ப்பித்து விட்டிருக்கிறார். என் நன்றி எல்லையை மீறியது. அம்மா நிற்கிறாள் என்பதையும் பாராது அவரைக் கட்டிக்கொண்டேன் "சே, குழந்தையா நீ'' என்றார் அன்பாக. பிறகு சாயந்திரம் வருவதாகச் சொல்லி விட்டு 'வரட்டுமா' என்றார். 'இந்தாருங்கள்' என்று நூறு ரூபாயை நீட்டினேன். 'ஓ, அவ்வளவு நடந்துவிட்டதா?' என்று சொல்லிவிட்டு, "பெட்டியில் வைத்துக்கொள். பூட்டு வாங்கிவறேன்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னார். வண்டியில் ஏறிக் கொண்டு ஆபீஸை நோக்கிப் போய்விட்டார். நானும் தாயும், அறையை சுத்தப்படுத்துவதிலும், சாமான்களை ஒழுங்குப்படுத்திவைப்பதிலும், சமையல் செய்வதிலும்

முனைந்திருந்தோம். தாய் காய்கறிகளை வாங்கி வந்தாள். சமையல் ஒருவாறு முடிந்ததும் சாப்பிட்டு விட்டு படுத்தேன். அசதி மேலிட்டதால் அப்படியே கண்ணயர்ந்து விட்டேன். மாலையில் ஐந்து மணி இருக்கும். கார் வந்தது அம்மா என்னை எழுப்பினாள். நானும் தூக்க கலக்கத்தை விட்டு சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தேன். "அவர் வந்து விட்டாரா" என்றேன். 'அவுருவரலியாம். டைவர் வந்திருக்கான்,' என்றாள் என் தாயார். "ஓ! அவ்வளவு கத்துகிட்டியா' என்றேன் கலகலவென்று சிரித்தபடியே! வாசற்படியில் காத்திருந்த டிரைவர் 'பெரியம்மா, டைவர் இல்லே—டிரைவர்' என்றான். தாயும் நானும் சிரித்தோம்...'டைவரோ டிரைவரோ, என் வாயில் நுழைஞ்சதை சொன்னேன்" என்றாள் என் தாய். காப்பி போட்டு வைத்திருந்ததை சூடேற்றச் சென்றாள். நான் நடைப்புறம் சென்று, முகம், கால் கழுவி வரச்சென்று, பிறகு அலங்காரத்தில் ஈடுபட்டேன். அதற்குள் அம்மா காப்பியை சூடேற்றிக் கொண்டுவந்தாள். டிரைவருக்கு கொஞ்சம் கொடுக்கச் சொன்னேன். தாய் டிரைவரிடம் கொஞ்சம் ஊற்றிக்கொடுத்தாள். நானும் கொஞ்சம் குடித்தேன். பிறகு தாயிடம் விடை பெற்றுக்கொண்டு, காரில் ஏறிச் சென்றேன். தாய் வாசற்படியில் வந்து பார்த்துக்கொண்டே நின்றாள். டிரைவரிடம மானேஜரைப்பற்றி விசாரித்தேன். அவர் எங்கோ அவசரகாரியமாக முதலாளி வேலையாக வெளியூர் சென்றிருப்பதாகத் தெரிந்தது. எனக்கு பயமாக இருந்தது. சமாளித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தின்பேரில் என்னை நானே தைரியப்படுத்திக்கொண்டேன். வண்டி, விர்ரென்று பறந்து சென்று, பங்களா வாசலை அடைந்தது. முதலாளி மாடியிலிருந்தவாறே கீழே பார்த்திருந்ததை கவனித்தேன். அவர் சிரித்தார். நானும் சிரித்தேன்.

வண்டியை விட்டிறங்கி உள்ளே சென்று மாடியை அடைந்தேன். மாடிக்குச்சென்று, பிரத்தியேக அறைக்குச் சென்று கட்டிலில் அமர்ந்தேன். முதலாளியும் உள்ளே வந்து என் பக்கத்தில் அமர்ந்து என்னை சேர்த்து அணைத்துத் கொண்டு முத்த மாரிப் பொழிந்தார். பிறகு என்னை தனியாக விட்டு கீழே போய் வருவதாகக் கூறிச் சென்றார். அங்கே ஒரு புத்தகம் கிடந்தது. அதைப் பிரித்துப் பார்த்தேன். அதில் சினிமாவில் நடிக்கும் நடிகைகளின் படங்கள், அவர்களின் வாழ்க்கை வர்ணனைகள் என்ற தலைப்பில் அவர்களது வளர்ப்பு பிறப்பு முதலியவைகள் எழுதப்பட்டிருந்தன. அதைப் படித்துக் கொண்டே இருந்தேன். அதிலே கேள்வி பதில் என்ற பகுதியிலே நடிகைகள், நடிகர்கள் ஆகியவர்களைப்பற்றி விவரங்கள் எழுதப்பட்டிருந்தன. ரசிகர்களாம் அவர்கள், கேட்கிறார்கள். அந்த ஆசிரியர் பதில் எழுதுகிறாராம். கேள்வி பதில் பகுதிக்கு "கொய்னாவைக் கேளுங்கள்' என்றிருந்தது.

இதைப் படித்துக்கொண்டிருக்கும்போது அவர் வந்து விட்டார். 'ஓ இந்தப் பத்திரிகையா- இந்த ஆசிரியர் 'கொய்னா' வை எனக்குத் தெரியும். உன்னைப்பற்றி பிரமாதமா எழுதச் சொல்றேன். அதுக்கெகலாம் கவலைப்படாதே" என்று சொல்லிக்கொண்டே என் அருகில் அமர்ந்தார். மீண்டும் அதே அணைப்பு. மெள்ள என்னைப் பற்றிய விவரங்களை யெல்லாம் விசாரித்துத் தெரிந்து கொண்டார். கடிகாரம் எட்டடித்தது. நாழி ஆயிற்று என்பதற்காக அவரைப் பார்த்தேன். அதைப் புரிந்து கொண்டவர்போல 'மணியைப் பாக்கறியா? எல்லாம் போனால் போச்சு' என்றார். 'இல்லை அம்மா காத்திருப்பாங்க' என்றேன் தயக்கத்

துடன். 'உன் அம்மாவுக்குச் சொல்லியனுப்பிட் டேன். இன்னிக்கு டெஸ்ட் அதுதான் பரீக்ஷை இருக்குன்னுட்டு. கவலைப்படாதே. சாப்பாடெல்லாம் கொண்டுவரச் சொல்லியிருக்கறேன்" என்ருர். முத லில் எனக்கு கொஞ்சம் கஷ்டமாய் இருந்தாலும் சமாளித்துக் கொண்டு ஒப்புக்கொண்டேன். பிறகு ஊர்க் கதைகளை எல்லாம் பேசிக்கொண்டிருந் தோம். "சரி கீழே வா சாப்பிடப் போவோம்" என் ருர். 'இந்தா' என்று கூப்பிட்டு என்னை முத்தமிட் டார். கீழே இறங்கிஞேம். சாப்பாட்டுக்கு தனி அறையிருந்தது. பாய் போடப்பட்டது. பக்கத்தில் பக்கத்தில் சேர்ந்தே உட்கார்ந்தோம். பரிமாறுப வன், அவசர அவசரமாக இலையைப் போட்டு பரி மாறினன். நான் வாழ்க்கையிலே கண்டிராத உணவு அவை. மணம் மிகுந்த நெய்யும். மதுரமுள்ள பலவித காய்கறிகளும், இன்னும் பலவித அறுசுவை தரும் வஸ்துக்களும், இனிப்புத்தின் பண்டமும் பரிமாறப்பட்டன. அவ்வளவையும் சாப்பிட்டுவிட் டேன். அவருடன் சேர்ந்து கையலம்பினேன். பிறகு மாடிக்குச் சென்று நிலா முற்றத்தில் அமர்ந்திருந் தோம். பையன் ஒருவன், வெற்றிலைப்பாக்குத் தட் டையும். சிகரெட் டின்னைபும் கொண்டு வந்து வைத் தான். நானும் அவரும் ஒரே சமயத்தில் வெற்றிலை எடுக்க எத்தனித்தோம். அந்த விரலை அப்படியே நறுக்கென்று கிள்ளிவிட்டார். அவருக்கு அதிலே இன்பம். எனக்கு கொஞ்சம் வலித்தாலும் இன்ப மாகத்தான் இருந்தது-வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டேன். அவரும் போட்டுக் கொண்டு சிகரெட் டும் பற்ற வைத்துக் கொண்டார். நடு நடுவே புகையை வெளிக் கிளப்பிக்கொண்டே ஏதேதோ பேசினர். இன்ப சம்பவங்கள் சில. துன்ப சம்பவங் கள் பல. இப்படி மாறி மாறி அவர் அனுபவித்தார்

விவரிக்க முடியாத பல சம்பவங்களை எனக்குத் தெரிவித்தார். அவரது வார்த்தையிலே ஒருவித அனுதாபமும், பிரியமும் காணப்பட்டது. மணி பத் தடித்தது. 'உள்ளே போவோம்' என்று என்னை அழைத்துப் போனர். உள்ளே சென்றது ம்என்னை அப்படியே தூக்கிக் கட்டிலில் போட்டார். நானும் சிரித்தவாறே படுத்தேன். என் அருகில் வந்து உட் கார்ந்தார். உடனே அவர் கழுத்தைக் கட்டிய வாறே, என் மீது சாய்த்துக் கொண்டேன் முத்த மாறி பொழிந்தார். என்னை அப்படியே இருக்கச் செய்து விட்டு 'பெட்ரூம்' விளக்குபோன்றிருந்த விளக்கைத் தவிர்த்து மற்றவைகளை அணைத்துவிட்டு என் அருகே வந்து பக்கத்தில் படுத்துக்கொண்டார். மெள்ள அவர் கைகள் என் ரவிக்கையிள் முடிச்சு களை அவிழ்ப்பதை உணர்ந்தேன். வர, வர, அவர் கைகள் என் உடம்பில் சர்வ சாதாரணமாக நர்த் தனம் புரிவதை உணர்ந்துகொண்டு, நானும் அவர் மாதிரியே செய்து வந்தேன் அவர் ஆனந்தம் மேலிட்டவராக என் இதழ்களோடு இதழ் பொத்தி, என் உயிரையே உறிஞ்சு விடுபவர்போல் அப்படியே கொஞ்ச நாழி இருந்தார். பிறகுப் படிப் படியாக மன்மதக்கலை ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அன்று இரவு முழுதும் வாயடைத்த பதுமைகளாலே, உணர்ச்சியில் ஈடுபட்டு, மெய்மறந்திருந்தோம். சூரி யன் உதயமாகி வெகு நேரம் வரை அப்படியே படுத்திருந்தோம் என்பது நான் எழுந்து மணியைப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. நான் எழுந்து, தலைவாரிக் கொண்டு, ஆடைகளை சரிவர செய்து கொள்வதற்குள், சோம்பல் முறித்தவாறே அவரும் எழுந்தார். என்னைக் கூப்பிட்டு, மறுபடியும் சேர்த்து அணைத்துக்கொண்டார். 'இங்கேயே ஸ்நானம் செய் துட்டு சாப்டுட்டு, காண்டிராக்ட்லே கைஎழுத்துப்

போட்டுட்டு போகலாம்' என்று சொன்னார். வென்னீர் அறை இருக்குமிடத்தைக் காட்டினார். நான் ஸ்நானம் செய்வதற்குச் சென்றேன். அங்கே போனவுடன் ஒரு யோஜனை. உடுத்த புடவையுடன் வந்திருந்த எனக்கு குளித்தவுடன் மறுபடியும் உடுத்திக்கொள்ள புடவை வேண்டுமே என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆபீஸ் பையன் அங்கே, யாருக்கோ, காபி கொண்டு வரப் போனான். அவனைக் கூப்பிட்டு 'ஐயா'விடம் எனக்கு புடவை இல்லாத விஷயத்தைச் சொல்லும்படிக் கூறினேன். நான் வென்னீர் அறை போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் பையன் வந்தான் 'ஐயாவே கொணந்து கொடுக்கறாங்களாம் உங்களை குளிக்கச் சொன்னாங்க'' என்றான். நான் குளிக்கச் சென்றேன். அறைக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு, புடவையைக் களைந்து விட்டு, குளித்தேன். உடம்பு துடைத்துக் கொள்ள அதே புடவையை உபயோகிக்க எண்ணி, அதை கையில் எடுக்கும் சமயம் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. யார் என்று கேட்டதற்கு அவர் குரல் நான்தான் என தெரிவித்தது. கதவைத் திறந்துவிட்டு, கதவுமூலையில் ஒளிந்து கொண்டேன். உள்ளே நுழைந்த அவரும் கதவைத் தாளிட்டார். நான் மூலையில் நிற்பதைப் பார்த்து விட்டு என்னை ஈரம் தோய்ந்த உடலிலேயே கட்டிக் கொண்டார், அப்ப அவருக்கு என்னதான் ஆசையோ? நிமிஷத்துக்கொருதரம் அனுபவிக்க எண்ணுகிறாரே! அப்பொழுதுகூட ஆரம்பித்து விட்டார். நான் எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன்... ஹும். ஹும், அவர்தான் வெற்றிபெற்றார். சிறிது நேரத்தில் மீண்டும் நாங்கள் குளித்துவிட்டோம். கையோடு கொண்டு வந்திருந்த டவலையும்

புதுப் புடவையையும் ரவிக்கையையும் கொடுத்து விட்டு, அவர் வெளியே போனார். நான் சாவதான மாக, புடவையை உடுத்திக் கொண்டு, ரவிக்கையை போட்டுக்கொண்டு வெளியே வந்தேன். அவர் ஆபீஸ் அறையில் சட்டைப் பித்தானைப் போட்டுக் கொண்டு நின்றிருந்தார். "வா. வா இப்படி உட்கார் என்றார். நான் நாற்காலியில் உட்கார்ந்தேன். பையன், இரண்டு தட்டுக்களில் பலகாரம் கொண்டு வந்தான். ,சாப்பிடு' என்றார். சாப்பிடலானேன். பையன் தண்ணீரும் காபியும் கொண்டு வந்தான். அவருக்கு சிகரெட் டின்னையும் திறந்து கொண்டு வந்து வைத்தான். சாப்பிட்டு முடிவதற்கும், ஆபீஸ் கிளார்க், டைப்படித்துக் கொண்டு ,காண்டிராக்ட்' பாரத்தைக் கொண்டு வந்தார். என்னைக் கை எழுத் திடச் சொல்லி, எனக்கு தோழி வேஷம் கொடுக்கப் பட்டிருப்பதாகவும், ஆயிர ரூபாய் சம்பளம் என்றும் கூறினார். நான் கையெழுத்திட்டேன். இருநூறு 'அட்வான்ஸ்' என்று கொடுத்தார். அதையும் வாங்கி வைத்துக் கொண்டேன். கதாசிரியரைக் கூப்பிட்டனுப்பி, 'பாடம்' எழுதித் தரச் சொல்லி, சொல்லிக் கொடுக்கச் சொல்லுகிறேன் என்றார். 'இந்தம்மாவை வீட்டுக்கு கொண்டு விடச்சொல்' என்று கிளார்க்கிடம் கூறினார். நான் எழுந்து போகவும்; என்னை கம்மென்ற வாசனை கவர்ந்திருந் தது. எதிரே ஒய்யார நடை நடந்து, உடம்பை குலுக்கிக்கொண்டு, ஒரு நடுத்தர வயதுள்ள அம்மா புருவத்தை நெறித்துக் கொண்டு என்னை அலட்சிய மாகப் பார்த்தவாறே எதிரே வந்தாள். என்னைக் கூப்பிட்டார் முதலாளி. திரும்பி நின்றேன். 'இவர் தான், நம்ம கதாநாயகி, ஜில்ஜில்குமாரி' என்று அறிமுகப்படுத்தி, 'இந்தம்மாதான் உங்களுக்குத் தோழி' என்று என்னையும் அறிமுகப்படுத்தினார்.

அவளும் சிரித்தாள். நானும் புன்னகைபூத்தேன் போய்விட்டு வருவதாகக் கூறி விடைபெற்றுச் சென்றேன். அந்தம்மாவும் தலையசைத்தாள். நான் கீழே இறங்கிச் செல்லவும், கிளார்க்குகள், கசமுச வென ஏதோ பேசிக்கொண்டது என் காதில் லேசாக விழுந்தது. 'புதுஉருப்படி'என்ற வார்த்தை மட்டும் என் காதில் கேட்டது. நான் அதைப் பொருட்படுத்தாது வண்டியில் ஏறினேன். வண்டி வீட்டை நோக்கிப் பறந்தது. என்ன ஆச்சரியம்! வண்டி வீட்டை அடைந்தவுடன், வீட்டுக்குள் சென்றதும், மானேஜர் உட்கார்ந்து கொண்டிருந்தார். கேட்டதில் முன் இரவுதான் ஊரிலேருந்து வந்ததாகவும், நடைபெற்ற விவரங்களை கிளார்க் சொன்னதாகவும் கூறினார். என் தாயாரைப் பார்த்து "உன் பெண் கெட்டிக்காரியாகி விட்டாள். இனி என் தயவு வேண்டியதில்லை. 'என்றார் கேலியாக. எனக்கு 'சுருக்' கென்றுதைத்தது. 'அப்படிச் சொல்லாதீங்க. உங்களை மறப்பேனே! இந்த வாழ்வுக்கு நீங்க தானே காரணம்" என்றேன். 'எல்லாம் இப்ப இப்படித்தான் சொல்லுவே. நாளைக்கே ஸ்டாராயிட்டா, என்னை யாருன்னு தர்வாளே விட்டு கேக்கச் சொல்லுவே' என்றார் சிரித்தபடியே, நானும் சிரித்து விட்டேன். தாயாரும் அதற்குள் காபி போட்டுக்கொண்டு வந்து எங்கள் இருவருக்கும் கொடுத்தாள். டிரைவர் சிரித்தபடியே வாசற்படியில் நின்றுகொண்டிருந்தான், அவனுக்கும் கொஞ்சம் ஊற்றிக் கொடுத்தாள் என் தாய். மானேஜரும் "நான் ஆபீஸ்-க்கு இந்த வண்டியிலேயே போயிடறேன். அம்புறம் வரேன், என்று கூறி விட்டு, என்னைப் பார்த்தவாறே வண்டியில் ஏறிக் கொள்ள சென்றார். டிரைவரும் போய் வருவதாகக் கூறி போனான். நானும் தாயாரும் வாசற்படியிலே

நின்றுகொண்டு வண்டி மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு, உள்ளே சென்றேன். தாயார் சமையல் வேலையில் மும்மூரமாக ஈடுபட்டாள். நான் பாயைப் போட்டு படுத்தேன்.

பாயைப் போட்டு படுத்ததுதான் தெரியும். முந்தின இரவு ஏற்பட்ட அசதியில் அப்படியே உடம்பு தெரியாமல் படுத்துறங்கி விட்டேன். என்னை என் தாயார் எழுப்பியபோது மணி நான்கிருக்கும். எழுந்து காபி குடித்து விட்டு, முகத்தை அலம்பிக் கொண்டு 'டிரஸ்' பண்ணிக் கொண்டு தயாராக இருந்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் ஆபீஸ் கார் வந்தது. கதாசிரியர் வந்திருப்பதாகவும் என்னை முதலாளி அழைத்து வரச் சொன்னதாகவும் கூறினுள் டிரைவர். நானும் அம்மாவிடம் சொல்லிக்கொண்டு கிளம்புனேன். ஆபீஸை அடைந்து மாடிக்குச் சென்றேன். முதலாளி புன்னகை பூத்தவாறு உட்கார்ந்திருந்தார். அவர் எதிகர வேறொருவரும் உட்கார்ந்திருந்தார். நான் உள்ளே சென்ற உடன் என்னை உட்காரச் சொன்னர் உட்கார்ந்ததும் அவரை அறிமுகப்படுத்தி இவர்தான் கதாசிரியர் என்றூர் என்னையும் அவருககு அறிமுகப்படுத்தினுர். கதாசிரியர் ஒரு நோட்டுப் புத்தகத்தை என்னிடம் நீட்டி 'உங்கள் பாடம் இது' என்ருர். அவருடைய பார்வை என்னையே விழுங்கி விடுவதுபோல் இருந்தது. அவருடைய உடல் இளைத்திருந்தது அவரது கற்பனைகளில் குளுமையும் இனிமையும் இருந்தது. எப்பொழுதோ அவருடைய கதைகளை படித்ததாக ஞாபகம் இருக்கிறது, சிறிது நேரத்துக்குப் பிறகு, அந்த அறையில் சென்று சொல்லிக் கொடுங்கள்'! என்று என்னையும் ஆசிரியரையும் போகச் சொன்னர்.

நாங்களும் அந்த அறைக்குச் சென்றோம். சிறிது நேரத்துக்கெல்லாம்' அந்தஅறையில் ஆபீஸ் பையன், காபி, பலகாரம் கொண்டு வைத்தான் இருவரும் சாப்பிட்டோம். சாப்பிடும்போது, அவர் என்னை அடிக்கடி கவனித்துக்கொண்டிருந்தார். தண்ணீர் குடிக்கும்போது என் ஜாக்கெட் சேலை நழுவி கீழே விழுந்து விட்டது. என் மார்பகங்களை அவர் நன்கு பார்க்கும்படியயான சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்து விட்டன, தண்ணீர் டம்ளரை கீழே வைத்து விட்டு அவசர அவசரமாக, மேலே போட்டுக்கொண்டேன், அவர் தன்னுடைய கடைக்கண் பார்வையை வீசினார். காபி குடித்தவுடன், அவர் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தார்,

திசுருள்சுருளாக புகை மண்டலத்தை சிருஷ்டித்தார். பாடத்தை ஆரம்பிக்கலாமா என்றார். நானும் தலையை ஆட்டினேன், கதைப்படி தோழி, கதாநாயகிபோல் வேஷம் தரித்து, வில்லனை அவன் கதாநாயகியைப் பார்க்காதவனாதலால், அவனை ஏமாற்றவேண்டிய கட்டமாம். கதாநாயகியாக வந்து காதலை தத்ரூபமாக வில்லன்பேரில் காட்டவெண்டுமாம். அழகழகான கருத்துக்களுடன் எழுதியிருந்ததை உணர்ச்சியும் படித்துக்காட்டி என்னையும் அதேபோல் நடித்துக்காட்டச் சொன்னார். முதலில் அப்படி பேசி நடிப்பது கஷ்டமாகத்தான் இருந்தது. அவர் மெள்ள மெள்ள சொல்லிக் கொடுத்தார். உணர்ச்சியுடன் நடித்தார். சொல்லிக்கொடுத்தார். அவர் உடல் இளைத்திருந்ததே தவிர, உள்ளம் இளைக்கவில்லை. சிறிது நேரத்தில், அவர் மெள்ள நான் யார் என்பதை விசாரித்துக் கொண்டார். சாயந்திரம் வீட்டுக்கு வருவதாக கூறினார். பாடத்தை முடித்துக்கொண்டு நன்றி கலந்தபார்வையுடன் விடைபெற்றுக்கொண்டேன்.

முதலாளியிடம் வீட்டுக்குப்போவதாக கூறினேன் கம்பெனி காரில் ஏறிக்கொண்டு, குஷியாக வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். இரண்டு நாட்களில் கம்பெனிகார் மீண்டும் வந்து இன்று உனக்கு மேக்கப் இருக்கிறது சூட்டிங் வாஎன்று அழைத்துச் சென்றூர்கள். போனதும் மேக்கப்மேன் முகத்தில் ஏதேதோ வர்ணங்களை தடவினன். டிரஸ் காரன், பார்ப்போரை கவர்ந்திழுக்கும் செயற்கை மார்பகங்களை எனக்கு மார்பில் வைத்துக் கட்டிவிட்டான். பிறகு தலையைவாரி முடிந்து காகிதப் பூக்கள் அணிந்துகொண்டேன்.

எதிரே உள்ள கண்ணுடியில் பார்த்தேன் ஆஹா. என்னையே நான் நம்ப முடியவில்லை. எனக்கே ஆச்சரியமாக இருந்தது பயப்படாதேம்மா போவப்போவ எல்லாம் சரியாப்போயிடும்" என்றூன் மேக்-அப் ஆசாமி. 'அப்பாடி' என்று தப்பித்துக் கொண்டு ஸ்டுடியோவுக்குச் சென்றேன். அங்கே கும்பலாக சிலர் நின்று கொண்டிருந்தார்கள். காமிரா வைக்கப்பட்டிருந்தது. சூர்ய கிரணங்கள் போல் பல விளக்குகள் வெளிச்சத்தைக் கக்கிக் கொண்டிருந்தன. கதாநாயகி ஒரு நாற்காலியின் அருகில் நின்று கொண்டு, பாடத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தாள். ஆசிரியர் வந்து, 'இன்னிக்குப் பாடம், இதான்' என்று நாலைந்து தரம் நான் பேச வேண்டியவைகளை மட்டும் எழுதிக் கொடுத்திருந்தார். அவைகளை மனப்பாடப் பண்ணுவதில் இருந்தேன். டைரக்டர் வந்தார் ரெடி என்றூர். எல்லோரும் விலகினூர்கள் ......கதாநாயகி புன்னகை பூத்து டைரக்டருக்கு வணக்கத்தைத் தெரிவித்தாள். அவரும், என்னென்னமோ பேசி விட்டார். கடைசியாக, 'ரெடி' என்று கூறிவிட்டு, 'மெய்ட், மெய்ட்' என்று கூப்பிட்டார். ஆசிரியர் என்னை அங்கே அவன் அருகில் நிற்கச் சொன்னூர்

விளக்குகளை அணைத்தும், ஏற்றியும் வெகு நாழி பார்த்துக் கொண்டிருந்தார் காமிராமேன். இதில் என்ன விசேஷம் என்னவென்றால் ஆபீஸுக்கு அடிக்கடி போய் வந்ததில் பட உலகத்தில் அடிபடும் சில வார்த்தைகளையும் அதன் அர்த்தங்களையும் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தேன். விளக்குகள் சரியென்றதும், பாட ஒத்திகை ஆயிற்று. நான் பேச வேண்டியதை சரியாக பேசினேன். டைரக்டர் 'ஓகே' ரெடி என்றார். ஒரு ஒத்திகை. அப்புறம் படப்பிடிப்பு நடந்தது. அவள் பேசினாள். நான் பேசினேன்...'கட்' என்றார். மீண்டும் காமிராவை வேறு இடத்தில் நகர்த்தினார்கள். அதே ஒத்திகை. இப்படியாக, சிறுக, சிறுக, அன்று ஒரு காட்சியை முடித்தார்கள். இரவு ஆரம்பித்தது, மறுநாள் காலை ஐந்து மணிக்கு முடிந்தது. இரவில் கொஞ்சம் தூக்கம் கண்ணைக் கவ்வியது என்றாலும் சமாளித்துக் கொண்டேன். ஆரம்பத்தில் சிறிது படபடத்தது...பிறகு தைரியமாகி விட்டது...முடிந்ததும், மேக்-அப் அறைக்கு கதாநாயகியுடனே சென்றேன் அவள் பின்னாடி ஓடினான் மேக்அப் ஆசாமி. அவளுக்கு என்ன என்னமோ எடுத்துக் கொடுத்தான். முகத்தைக் ஒரு வெள்ளை ஸ்னோ போன்ற மெழுகால் துடைத்துக்கொண்டு, அவன் கொடுத்த துணியில் முகத்தைத் துடைத்துக் கொண்டு, ஆடைகளைக் களைந்துவிட்டு தன் காரில் ஏறிச்சென்றாள். அடுத்தபடி, மேக்-அப் மேன் என்னிடம் வந்தான். தேங்காய் எண்ணெயைக் கொடுத்து துடைத்துக் கொள்ளச் சொன்னான். எனக்கு மட்டும் அந்த மெழுகில்லையா என்றேன். "இல்லை ஹீரோயினுக்கு மட்டும் என்று பதிலளித்தான். ஒருவாறு துடைத்துக் கொண்டேன். ஆடைகளைக் கழற்ற அந்த அறைக்குப் போனேன். அவனும்

வந்தான் உடைகளைக் களைந்து எறிவதில் உதவி செய்தான். முதுகுப்புறப் போட்டிருந்த முடிச்சுகளை அவிழ்க்க வந்தவன் அப்படியே கைகளை நீட்டி முன் பக்கமாக என்னைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டான், திமிற முயன்றேன் முடியவில்லை. 'சே. ஏன் இப்படி திமிர்றே' என்று இறுகப் பிடித்தணைத்து என் முன்பக்கம் வந்து என்னை முத்தமிட்டான். அவன் வாயிலிருந்து எழுந்த குடிநாற்றம் என்னைப் புரட்டி எடுத்தது. சரேலென்று விடுவித்துக் கொண்டு வெளியே வந்தேன். தாயும் ஸ்டுடியோவுக்குள்ளிருந்து ஆசிரியருடன் வெளியே வந்தாள். என் அருகில் வந்த ஆசிரியர் 'நன்னு ஆக்ட் பண்ணிட்டியே' என்ருர், வண்டி வந்து நின்றது வீட்டை நோக்கி விடை பெற்றுச் சென்றேன். ஆசிரியர் என்னைப் பார்த்தவாறே ஸ்டுடியோ ஆலமரத்தினடியில் நின்று கொண்டிருந்தார்.

வண்டி, வீட்டை யடைந்ததும், நானும் அம்மாவும் இறங்கினேம். உள்ளே நுழைந்தவுடன் படுக்கையை நாடினேன். இரவு முழுதும் கண்ணை விழித்ததால் அப்படியே அசந்துவிட்டேன். தாயும் சிறிது நேரம் படுத்திருந்ததாகக் கூறினுள். நான் பனிரெண்டு மணிக்கு படுக்கையை விட்டு எழுந்தபோது எழுந்து காபி குடித்து விட்டு இருந்தேன். தாய் சமையல் செய்வதில் ஈடுபட்டிருந்தாள். மணி இரண்டிருக்கும் சாப்பிட்டேன். உடல் அசதியாக இருந்ததனல் அப்படியே சாய்ந்து கொண்டிருந்தேன். ஆபீஸிலிருந்து வண்டி வந்தது. மணி நாலு இருக்கும் முதலாளி கூப்பிடுவதாக அழைத்தான் டிரைவர் டிரஸ் செய்து கொண்டு கிளம்பினேன்.

ஆபீஸை அடைந்தேன். மாடிக்குப் போனேன் முதலாளி தலையை அசைத்தவாறே கூப்பிட்டார்

உள்ளே போடப்பட்டிருக்கும் நாற்காலியில் உட்கார்ந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் பையன் காபி, டிபன் கொண்டு வந்தான். முதலாளி நேற்று நான் நடித்த நடிப்பைப்பற்றி பாராட்டிப்பேசினர். இதே மாதிரி நடித்தால் பெயரும் புகழும் கிடைக்கும் என்று கூறினர். நானும் சரி என்றேன். சிறிது நேரத்துக்கெல்லாம் ஆசிரியர் வந்தார். அவரும் என்னைப் பார்த்து புன்னகை பூத்தார். பக்கத்தில் போடப்பட்டிருக்கும் நாற்காலியில் உட்கார்ந்து என் நடிப்பைப் பற்றி புகழ்ந்தார்- நான்புளகாங்கிதம் அடைந்தேன். என் பெருமை எனக்கு தாளவேயில்லை. இரவு ஏழு மணி வரை பேசிக் கொண்டிருந்தோம். ஆசிரியர் அசட்டு சிரிப்புடன் விடை பெற்றுக் கொண்டார்.

முதலாளி மீண்டும் புன்னகை புரிந்தவாறே, உள்ளே போகலாமா என்ருர். நானும் தலையசைத்தேன். ஆனல் முதல் நாளன்று திருப்தியாக சென்றேன். ஆனல் இன்று 'முன்னுக்கு வர வேண்டி' சென்றேன்- என் உடலை அவர் வசம் ஒப்புவித்தேன். அவர் இஷ்டப்படி என் உடலை .............. மணி ஒன்பதரை இருக்கும். அது வரை என்னென்னமோ செய்தார். பேச்சோடு பேச்சாக என் பெயரை பத்திரிகைகளில் போடுவதாகவும், 'கொய்ஞ' வை விட்டு வாழ்க்கையை எழுதச் செய்வதாகவும் போட்டோக்களை பிரசுரிப்பதாகவும், சொன்னர். என் கண் இன்னும் திறந்தது. அவருக்கு மோக வெறி ஊட்டினேன். அவர் மயங்கினர். மறுநாள் காலை பத்து மணிக்கு கட்டாயம் வண்டி அனுப்புவதாகவும் கூறினர். ஒன்பதரை மணிக்கு ரெடியாக இருக்க வேண்டும் என்றும் சொன்னர் நானும் உடைகளை சரிப்படுத்திக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தேன். கீழே

இறங்கி வரவும் வண்டி தயாராக இருந்தது வண்டியிலிருந்து இறங்கி வீட்டை அடைந்தேன்.

வீட்டிற்குள், சென்றவுடன், மன நிம்மதி இல்லை. மறுநாள் நடைபெறப் போகும் சம்பவங்களை நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தேன். அப்ப எப்படியோ இரவு கழிந்தது. மறுநாள் காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து விட்டேன். சுறுசுறுப்பாக என் வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு, தயாராகக் காத்திருந்தேன். வண்டி வந்தது. தாயிடம் அவசர அவசரமாக சொல்லிக் கொண்டு வண்டியில் குதித்தோடி ஏறிக் கொண்டேன், வண்டி சிட்டாகப் பறந்தது பங்களாவை நோக்கி.

பங்களா மெத்தைக்கு நான் போனதும், என் கண்களில் பட்டது ஒரு காமிரா, நாலைந்து நபர்கள் முதலாளியுடன் உட்கார்ந்திருந்தார்கள். முதலாளி என்னைப் பார்த்ததும், பலமாகச் சிரித்து, 'வாம்மா வா, இப்படி உட்கார்' என்றார். உட்கார்ந்தவுடன் என்னை அறிமுகப்படுத்தினர். புகைப்பட நிபுணர், ஒருவர். மற்றொருவர், பத்திரிகை ஆசிரியர் 'கொய்ஞ' ஆசிரியரை மறுபடியும் ஒரு தரம் பார்த்துக் கொண்டேன். சில நிமிஷங்களில் மேக்கப் அறைக்குப் போய் 'மேக் அப்' போட்டுக் கொள்ள அனுப்பித்தார்கள். அங்கே தயாராக காத்திருந்தான் மேக்-அப் மேன். என்னைக் கண்டவுடன் அவனும் ஹிஹி என்று சிரித்தான். நான் கண்ணாடிக்கெதிரே உட்கார்ந்து கொண்டேன். மேக்-அப் ஆரம்பமாயிற்று, அன்று நடைபெறப்போகும் சம்பவங்களையே எண்ணி நான் ஆனந்தத்தில் ஆழ்ந்திருந்தேன். அவன் மேக் அப் செய்கிறான் என்று எண்ணியதற்கு மாறாக,

அவன் என் மேல் உடைகளை களைவதில் ஈடுபட்டிருந்தான். நான் சட்டென அவன் கைகளைப் பிடித்து நிறுத்தினேன். அதற்கு அவன் "ஏ நான் மாத்திரம் உன்னை ஸ்டாராக்க மாட்டேனு" முகத்தை சந்திரன் மாதிரி செய்துடுவேனே என்ருன் பேச்சோடு பேச்சாக. 'ஓ இவனையும் திருப்திபடுத்தினுல் நாம் முன்னுக்கு வர வழி உண்டு' என்ற எண்ணம் உதிக்கவே, பேசாமல் இருந்து விட்டேன். அறைக் கதவை தாழ்ப்பாளிட்டுக் கொண்டு. என்னை சுவரோடு சுவராக நிற்கவைத்தான். அவன் செய்கை முடிந்தவுடன், காமிராவில் ஸ்டில் எடுத்தார்கள். கொய்னு வாழ்க்கையைக் கேட்டுக் எழுதிக் கொண்டார்.

பிறகு முதலாளியின் அந்தரங்க அறைக்குச் சென்றேன். அவரும் பின்னுடியே வந்தார். நான் கட்டிலில் சென்று படுத்தேன். அவரும் என் அருகில் வந்து உட்கார்ந்து முகத்தை என் முகத்தோடு கொண்டு வந்தார். பிறகு இருவரும் இன்பபுரிக்குச் செல்ல ஆயத்தமானேம். சில நிமிஷங்கள் வரை உணர்வற்று இருந்தோம். இன்பபுரிக்குச் சென்ற களைப்பு தீர, அவர் வெளியே வந்தவுடன், ஒரு பாதாம்கீரை, பையன் வசம் அனுப்பினர். நானும் அதை வாங்கிக் குடித்துவிட்டு, வீடு நோக்கி கிளம்பினேன். தனியாக அழைத்துப் போய் செலவுக்கு வைத்துக் கொள் என்று சொல்லி ஐம்பது ரூபாய் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு வீடு நோக்கிச் சென்று, தாயிடம் நடந்ததைக் கூறினேன். முதலாளியுடன் இருந்ததைப் பற்றி அல்ல. படம் எடுத்ததையும் மற்ற செய்கைகளையும்.

பத்து, நாட்கள் சென்றவுடன், காலையில் போஸ்ட்' என்ற குரல் கேட்டு திரும்பினேன் தபால்காரர் ஒரு புத்தகத்தைக் கொடுத்தார். உறை

யில் பத்திரிகையின் பெயரைப் பார்த்தவுடனே எனக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. துள்ளிக் குதித்தேன். பிறகு, படபட வென்று பக்கங்களைப் புரட்டினேன். "முன்னணி நக்ஷத்திரம்" என்று என் படங்களை பல வர்ணங் களில் போட்டு எழுதப்பட்டிருந்தது. ஆர்வத்துடன் படிக்கலானேன். நான் கூறியதற்கு மாருக, சில செய்திகள் இருந்தன. நான் உயர் குடும்பத்தில் பிறந்ததாகவும், கலைக்காக பாடுபட இக்கலையில் நுழைவதாகவும் மற்றும் என்னென்னமோ எழுதப் பட்டிருந்தது. பிரமாதமாக அமைந்திருந்தது. 'அம்மா அம்மா' என்று அழைத்தேன். சமையற் கட்டிலிருந்து அம்மா 'என்னடி கண்ணு' என்று ஓடி வந்தாள். அம்மாவிடம் பத்திரிகையைக் காட்டி னேன். அதிசயித்துப் போனுள் அம்மா! உற்றுப் பார்த்தாள். 'அடி நம்பவே முடியலையே' என்ன எழுதியிருக்கு என்றுள். நான் படித்துக் காட்டி னேன்.

"ஏண்டி ஊர்லே நம்புவாங்களா" என்றுள் தாயார். "போகப் போக எல்லாத்தையும் நம்பும் அம்மா இந்த உலகம்" என்றேன் நான். வண்டியின் ஹார்ன் சப்தம் கேட்டது. கம்பெனி வண்டி தான். டிரைவர் "ஐயா, கூட்டிவரச் சொன்னுங்க. பேப்பர் காரருகூட வந்திருக்காரு" என்றுன். நானும் சிறிது நேரத்தில் கிளம்பினேன். ஆபீஸ் மாடியில் முதலாளியுடனும் ஆசிரியரும் உட்கார்ந்திருந்தார். அவருக்கும் சேர்த்து நமஸ்காரம் செய்தேன். "என்ன ஸார், ஒரே அடியாக தூக்கி எழுதிப்பிட் டீங்களே" முதலாளி சிரித்துக் கொண்டே, 'அவுங்க நினைச்சா எதையும் செய்யலாம்' என்று கூறி பையனை அழைத்து காபி, பலகாரம் கொண்டு வரச் சொன்னுர். பையனும் சென்றுன். அங்கே,

பத்திரிகை கிடந்தது. ஆபீஸ் பையனிலிருந்து எல்லோர் கையிலும் ஒவ்வொரு பத்திரிகை இருந்தது. முதலாளி சிரித்துக் கொண்டே, 'நாளை காலையில் ஹிண்டு பேப்பரிலும் விளம்பரம் கொடுத்திருக்கிறேன்" என்றார். ஆசிரியர் சிறிது நேரம் இருந்து விட்டு போய் விட்டார். பிறகு கதாசிரியர் வந்தார். "என்ன, பலமாக பேட்டி நடந்திருக்கிறதே" என்றார். 'பேட்டி மாத்திரமல்ல. போட்டிகூட' என்றேன். "போட்டியா—எனக்குக்கூடவா" என்றார். இல்லை என்று தலையசைத்தேன். அடுத்த மாதம் வேறு பத்திரிக்கையில் உன்னைப்பற்றி போடச் சொல்லுகிறேன் என்றார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு கதாசிரியரும் போய் விட்டார். முதலாளி கூப்பிடுவதாகக் கூறினான். இதற்குள் முதலாளி இடையே எழுந்து போனதை நான் கவனிக்கவே இல்லை. பையன் காபி, பலகாரத்தை வேறு வழியாக அந்த அறையில் கொண்டு வைத்து விட்டான் போலும், அங்கே மேஜையின்மீது தயாராக இருந்தது காபி டிபன். முதலாளி வந்தார் வேறு வழியாக—அவரும் என்முன் அமர்ந்து காபி, பலகாரம் சாப்பிட்டார். என்னை பீச்சுக்கு அழைத்துப் போவதாகச் சொன்னார். சிறிது நேரத்தில் வண்டி எங்களை ஏற்றிக் கொண்டு பீச்ரோட்டை நோக்கி வேகமாக போய்க்கொண்டே இருந்தது. விசித்திரமான காதல்ஜோடிகள் என் கண்ணுக்கும் புலப்பட்டார்கள். உல்லாஸ வாழ்வு வாழும் ஜோடிகள் சிலர் என் பார்வையில் விழுந்தார்கள். வண்டி வெகு வேகமாக ஓடி ஒரு ஒதுப்புறமான இடத்தில் நின்றது. அவரும் நானும் இறங்கி மணற்பரப்பை நோக்கிச் சென்றோம். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம். மங்கலான வெளிச்சம். அவர் மெதுவாக என் தோள்களைப் பிடித்தார்.

நான் அவர் முகவாய்க்கட்டையைப் பிடித்தேன். அவர் முகத்தை என் அருகில்கொண்டு வந்தார். 'இச்' சென முத்தமிட்டேன். அவர் என்னை அன்போடு சேர்த்து அணைத்துக்கொண்டு, மணற்பரப்பிலே என்னை படுக்கவைத்தார். விம்மும் என் மார்பகங்களின் தன் தலையைவைத்துக் கொண்டு சிறு குழந்தைபோல் சாய்ந்திருந்தார் சிறிது நேரம் பிறகு அவர் வழக்கமாக என்னுடன் நடத்தும் லீலைகளுக்கு ஆயத்தமானர். அவர் ஆட்டிய பம்பரமாக இருந்தேன். அசதியில் அவர் அப்படியே படுத்திருந்தார். நானும் இருந்தேன். எவ்வளவு நாழி அப்படி இருந்தோமோ தெரியாது. மணி ஒன்பது இருக்கும் என எண்ணுகிறேன். உணர்வு வந்தவராக அவரை எழுப்பிவிட்டு நானும் ஆடைகளை சரி செய்துகொண்டு கிளம்பினேன். வண்டியின் பின் ஸீட்டில்ஏறி இருவரும் உட்கார்ந்தோம். அவர் அப்படியே என்மீது கையைப் போட்ட வண்ணம் சாய்ந்து கிடந்தார். டிரைவரை என் வீட்டுக்கு போகும்படி உத்திரவிட்டார். வண்டி, சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து என் வீட்டண்டை வந்து நின்றது வண்டியிலிருந்து இறங்கி போனேன். முதலாளிகார்என்னை விட்டுவிட்டு ஆபீஸுக்குச் சென்றது. கதவைத் தட்டினேன். அம்மா கதவைத்திறந்தாள். 'ஏண்டி சாப்பிடறயாடி' என்று கேட்டதற்கு "வேண்டாம் படுக்கையைப் போட்டுட்டா தேவலே" என்றேன். அவளும் 'என்னமோ, நீ இப்படி இருக்கறே" என்று சொல்லி விட்டு படுக்கையைப் போடுவதில் முனைந்திருந்தாள். படுக்கையைப் போட்டதும் நான் சிறு குழந்தைபோல் அவசர அவசரமாக அதில் வீழ்ந்து படுத்துக் கொண்டேன். நித்திரை என்னைத் தழுவியது. அம்மாவும் படுத்து விளக்கை அணைத்தாள். விடியற்காலை

விளம்பரத்தை தாங்கி வரும் பத்திரிகையைப் பற்றிய நினைவுடன்தான் நான் படுத்தேன். அம்மாவிடம் காலையில் ஒரு 'ஹிண்டு' பத்திரிகை வாங்கி வா என்று சொல்லி ஒரு உத்திரவு போட்டு விட்டு கண்ணயரலானேன். அம்மாவும் தன் வழக்கமான குறட்டையுடன் தூங்கலானுள்.

காலையில் எழுந்ததும், அம்மாவும் 'ஹிண்டு' பேப்பர் வாங்கிவைத்திருந்தாள். பெரிய அளவில் பலவர்ணங்களில் எங்கள் படத்தின் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது, ஜில்ஜில் குமாரி, புதிய நக்ஷத்திரம் மஞ்சுபாஷணி, மற்றும் ராஜமோஹன் முதலியவர்கள் நடிக்கிருர்கள் என்று போடப்பட்டிருந்தது. நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. நாளொரு மேனியும், பொழுதொரு 'கால் ஷீட்' மோக, படப்பிடிப்பு நடைபெற்று வந்தது. சுமார் ஆறு மாதகாலத்தில் படம் ஒருவாருக முடிந்தது. கடைசி நாளன்று, முதலாளி எல்லோருக்கும் மரியாதை செய்தார். போட்டோ எடுக்கப்பட்டது. படத்தில் நடித்த எல்லோரும் நான் நன்ருக நடித்திருப்பதாகச் சொன்னுர்கள். நான் இன்னும் படத்தைப்பார்க்கவே இல்லையே! என்ன செய்வது! முதலாளி கணக்குத் தீர்த்துக் கொடுத்துவிட்டார் என்ருலும், அடுத்த படத்திற்கு மேலும் ஆயிர ரூபாய் போட்டுத் தருவதாகவும், மற்ற படமுதலாளிகள் கூப்பிட்டால் மேலும் பணம் கேட்க வேண்டும் என்றும் எச்சரிக்கை செய்தார். நானும் சரி என்றேன். "உன்னை நடிக்க வைத்த பெருமை டைரக்டரையே சேரும்" என்ருர். "ஆம், நான் அவருக்கு கடமைப் பட்டுள்ளேன்" என்றேன். "அடேயப்பா, நல்லா பேசறயே" என்ருர் முதலாளி நானும் சிரித்து விடை பெற்றுக் கொண்டேன். படத்தின் டைரக்டரை இதுவரை படப்பிடிப்பிலே

பார்த்து பேசிய பழக்கமே தவிர, அவருடைய வீட்டுக்கு போனதில்லை. அவர் வீட்டுக்குப் போக வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. சாயந்திரமாகப் போக எண்ணினேன். மாலையானதும் டாக்ஸி ஒன்றை அமர்த்திக் கொண்டு, டைரக்டர். வீட்டுக்குச் சென்றேன். அங்கு நாலைந்து நபர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் வந்ததைப் பார்த்து டைரக்டர், அங்கிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். என்னை முறைத்துப் பார்த்தார்கள். நானும் அவர்களிடம் உடனே விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்கு சென்று விட்டேன். இரவு 9 மணிக்கு, டைரக்டரே என் வீட்டுக்கு வந்தார். நானும் வரவேற்றேன். உள்ளே வந்தவுடன் அம்மா பாயைப் போட்டு உட்காரச் சொன்னாள். வெற்றிலை தட்டை எடுத்து வைத்தாள். அவரும் போட்டுக்கொண்டார். டைரக்டராக தன்னை பேசி விட்டதாகவும், என்னைப் பேச வந்திருப்பதாகவும் கூறினார். நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். 'சரி போயிட்டு வரட்டுமா' என்றார் என் அம்மா கெட்டிக்காரி. நாங்கள் பேசுவதற்குள் வெளியே சென்று அவரைப் பற்றிய முழு விவரங்களை அறிந்து கொண்டு வந்து விட்டாள் என்பது எனக்கு பிறகுதான் தெரியும். அம்மா, அவருடைய வார்த்தையைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள். "நல்லாயிருக்குது ஞாயம். இத்தனை நாழிக்குமேலேயா? இருந்துட்டு போகலாம்" என்று என்னைப் பார்த்து கண்ணைச் சிமிட்டினாள். அவர் முதலில் சங்கோஜப்பட்டார் என்றாலும் பிறகு ஒப்புக்கொண்டு டாக்ஸியை அனுப்பிவிட்டார். நானும் அவரும் பேசிக் கொண்டிருந்தோம். அம்மா நாயர் கடைக்குச் சென்று கூஜாவில் பால் வாங்கிக் கொண்டு வந்தாள். மலைப்பழமும் கொண்டு

வைத்தாள். பிறகு நடைப்புறம் சென்ருள் தன் படுக்கையை எடுத்துக் கொண்டு, அறைக் கதவை சாத்திக் கொண்டு சென்ருள். அவர் என்னைப் பார்த்தார். அவர் கண்களின் பார்வையை புரிந்து கொண்டேன். பழத்தை உரித்துக் கொடுக்கப் போன என் கையைப் பிடித்துக் கொண்டார். நான் திமிற எத்தனிக்கவில்லை. அவர் மேல் உராய்ந்து கொண்டு அவர் மடி மீது என் தலையை வைத்தவாறே சாய்ந்தேன். அவர் இன்பக் கனியமுதம் கொடுத்தார். நான் உண்டேன். சிறிது நேரம் சென்றதும் நான் படுக்கையைப் போட்டேன். இருவரும் ஒன்று சேர்ந்தோம். எனக்கு எவ்வளவோ தருவதாகவும், நிரந்தரமாக தன்னுடன் வைத்துக் கொள்ளுவதாகவும் சொன்னர். விடியும் நேரம் வந்தது. அவர் எழுந்தார். நானும் பிரியா விடை கொடுத்தேன். ஊருக்குச் சென்று, பணத்துடனும். வேண்டிய ஏற்பாடுகளுடன் வருவதாகவும், விடை பெற்றுச் சென்றார். கடிதம் எழுதுவதாகக் கூறி. ஐந்நூறு ரூபாயை (அட்வான்ஸாக) அச்சாரமாகக் கொடுத்துச் சென்றார். தாயும் நன்றி கலந்த பார்வையுடன் விடை கொடுத்தாள்.

விவரிக்க முடியாத ஆனந்தம் அடுக்கடுக்காக வரும்போது என் ஆனந்தத்தின் எல்லைக்கு அளவு உண்டா? பத்துப் பதினைந்து நாட்கள் சென்றன. ஒரு நாள் காலை அழைப்புக் கடிதம் வந்தது. அதில் படத்தின் வியாபாரக் காக்ஷி காலையில் பத்து மணிக்கு 'ஸன்ஜோ' தியேட்டரில் நடைபெறுவதாகக் கண்டிருந்தது. நான் அம்மாவிடம் விஷயத்தைக் கூறினேன். அவளும் நானும் டிரஸ் செய்து கொண்டு, டாக்ஸி ஒன்று அமர்த்திக் கொண்டு, தியேட்டர் வாசலை அடைந்தோம். அப்பப்பா! என்ன கூட்டம். படத்துறை சம்பந்தப்பட்டவர்

களும், பத்திரிகைரகாரர்களும், மற்றும் நடிக நடிகையரும் எல்லோரும் வந்திருந்தனர். ரஸிகர் கள் கும்பல் வேறு. நான் வண்டியை விட்டிறங்கிய தும், 'இவ தான் மஞ்சுபாஷணி, மஞ்சுபாஷணி டோய்' எனக் கொக்கரித்து ஆர்ப்பாட்டம் செய் தனர். என் பெருமை! அடேயப்பா என்று நினைத்தது என் மனம். உள்ளே சென்றேன். பாட்டுப் புத்தகத்துடன், புஷ்பம், ஆரஞ்சு இவை களைக் கொடுத்தார்கள். பாட்டுப் புத்தகத்தில் புதிய நக்ஷத்திரம் என்று என் பெயர் போடப்பட்டிருந் தது. மணி கிர்ரென்று அடித்தது. விளக்குகள் அணைந்தன படம் ஆரம்பிக்கப்பட்டது. படத்திலும் என் பெயரை நன்ருகப் பளிச்செனத் தெரியும்படி போட்டிருந்தார்கள். படத்தில் நான் வரும் கட்டங் களில் எல்லாம் பார்த்தவர்கள் ஆரவாரம் செய்தார் கள். என் தாயின் கண்களில் ததும்பிய ஆனந்தக் கண்ணீருக்கு அளவே இல்லை எனலாம். இடை வேளை வந்தது விளக்குகள் ஏற்றப்பட்டன சுற்றி இருந்தவர்கள் எல்லோரும் என்னைக் கை காட்டி. ஜாடை செய்து 'அவதான் அவதான்' என்று பேசிக் கொண்டார்கள். நான் தலையைக் கவிழ்ந்தவாறே உட்கார்ந்திருந்தேன். மீண்டும் படம் ஆரம்பமாகியது. படத்தின் இறுதிக் கட்டம் வரையிலுமே, அதே ஆரவாரம் தான். படம் முடிந் தது. சுபம் என்ற எழுத்துக்கள் தோன்றி மறைந் தன. பட மாளிகையின் விளக்குகள் சுடர்விட்டுப் பிரகாசித்தன. ஒவ்வொருவராக மாடியிலிருந்து கீழே இறங்கினேம். தெரிந்தவர்களும் தெரியாத வர்களும் என்னிடம் வந்து "நல்லா செய்திருக்கே. உன் ஆக்ட் ஜோர்" என்று கூறி சென்ருர்கள். கேட்டினருகில், டைரக்டரும். முதலாளியும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு என்று மீண்

டும் ஒரு முறை வணக்கம் செலுத்தி விடைபெற்றேன். படம் பார்த்த கும்பல்களில் பலர் நான் பேசிய பேச்சுக்களைத் திருப்பிக் கூறி என்னிடம் சிரித்தனர். நானும் புன்னகை பூத்து, வீடு நோக்கிப் போனேன்!

ஒரு வாரம் சென்றது. படத்தின் ஆரம்ப நாள் மூன்று தியேட்டர்களில் ஆரம்பம். சென்னையின் சுவர்களெல்லாம் ஒரே அறிவிப்பு மயம். என் உருவத்தில் பல 'போஸ்டுகள்' மூலை முடுக்குகளில் எல்லாம் காக்ஷியளித்தன. பத்திரிகைகளில் எல்லாம் என் படங்களே! கதாநாயகி ஜில்ஜில் குமாரியை விட என் நடிப்பைப் பாராட்டியே விமர்சனங்கள் வெளிவந்தன, படம் வாரக் கணக்கில் ஓடியது! முதலாளிகளில் பலர் என் வீடு தேடி வந்தனர். ஊருக்குப் போயிருந்த டைரக்டர் கூட வந்து விட்டார். ஐந்தாறு படங்களுக்கு நான் கையெழுத்திட்டேன். ஒரு விளம்பரத்துக்காக துடித்த என்னை அந்த ஐந்தாறு படக் கம்பெனிகளின் விளம்பரங்களும் மாறி மாறித் திக்குமுக்காடச் செய்தன. பணமும் அதிகம் தான் வாங்கினேன். இருந்தும் வீடு போதாதுபோல் தோன்றவே பெரிய பங்களா ஒன்றிற்கு மாறினேன். ஓட்டைக் குடிசையில் இருந்த நான் இப்பொழுது ஒப்பற்ற மாளிகையில் வாசம் செய்தேன். வாயிற் காப்போர்கள், எடுபிடி ஆட்கள், இப்படி பல வகைகளிலும் என் வாழ்வு முன்னேற்றமடைந்தது. ஆரம்பத்தில் என்னை கைதூக்கி விட்ட மானேஜரின் ஞாபகமே இல்லாமற் போயிற்று. பணம் வந்தவுடன் எதைச் செய்கிறோம் என்ன செய்கிறோம் என்ற நினைவே அற்றுப் போகிறது. பணம் மேல் பணம். படத்துக்கு மேல் படம். இது தவிர, பட ஆசைக்காக, முதலாளிகளை வழிப்படுத்தும் கைங்கரியங்கள். அதன் மூலம்

வருவாய். இப்படி இருந்து வந்தேன். என்னைப் படத்தில் பார்த்து விட்டு, மனதைப் பறி கொடுத்த மைனர்கள் பலர். அவர்கள் படாதபாடுபட்டு, யார் யாரையோ, சிபாரிசுகள் பிடித்து, படம் எடுப்ப தாகக் கூறி, என்னை அடைவதற்காக எவ்வளவு பாடுபட்டார்கள் தெரியுமா? அதெல்லாம் ஒரே ராமாயணம்.

கோணுபட்டு, ஜமீன்தார் என்ன, பூலதூர், மைனர் என்ன, மறையாங்குடி இளைய ராஜா என்ன, இப்படி பல ரகப் பேர் வழிகள் என்னிடம் வந்து போயிருக்கின்றனர். ஒரு படம் பூராவும் அனேக இரவுகள் கண் விழித்து சம்பாதிப்பதை விட ஒரே இரவில் எத்தனை சாம்ராஜ்யங்களை வேண்டுமானாலும் அடையலாமே என்ற உண் மையை அனுபவத்தில் கண்டேன். முதலில் ரகசிய மாக இருந்த இச்செய்திகள் நாளாவட்டத்தில் வதந்தி ரூபமெடுத்து உலவலாயின. ஆனால், என் விதி இந்தக் கதியில் கொண்டுவரும் என்று நினைக் கவே இல்லை...

அந்த சம்பவம்தான் மறக்க முடியாதது. நான் இறந்த பின் மறந்தாலென்ன, மறையாமல் இருந்தா லென்ன? 'வெட்ட வெளிச்சம்' என்று ஒரு பத்திரி கையைப் பற்றி ஊர் பூராவும் பேச்சாக இருந்தது. பையனை விட்டு, ஒரு பிரதி வாங்கிவரச் சொன் னேன். அதில் சினிமா நடிக நடிகைகளின் அந்த ரங்க வண்டவாளங்களைப் பற்றி எழுதப்பட்டிருந் தது. அதில் என்னைப்பற்றியும், என்னுடைய நடத்தைகளையும் பற்றி பச்சை பச்சையாக எழுதப்பட்டிருந்தது. ஆனால் சில சரடுகளும் விடப்பட்டிருந்தன. வாராவாரம் என்னைப் பற்றி இப்படி எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து, ஊர் முழுதும் ஒரே அமளி துமளியாக இருந்தது.

நான் இருக்கும் பங்களா முன் ஆர்ப்பாட்டங்கள். வெளியே தலைக்காட்ட முடியாமல் செய்தது. சினிமாப் பத்திரிகைகளில் என்ன தான் 'அது பொய்—இது பொய்' என்று விளம்பரம் கொடுத்தும் பயனில்லாது போயிற்று. அதற்கேற்றாற்போல் என் உடல் நலன் வேறு கெட்டு விட்டது. டாக்டரிடம் காண்பித்ததில் கூற முடியாத ஒரு வியாதி என்று கூறி விட்டார். என் இதயம் வெடித்து விடும் போல் இருந்தது. என் தலை சுற்றியது. அந்தப் பத்திரிகை என்னைக் கண்டபடி எழுதி வந்தது. அதற்காக, அந்த பேனாபிடித்த சீர்திருத்த பத்திரிகாசிரியர் வசியப்படுத்த எவ்வளவோ முயன்றேன். ஒன்றும் நடைபெறவில்லை. நாளுக்கு நாள் என்மேல் இருந்த அபிமானம் போய் அருவருப்பு ஏற்பட்டது மக்களுக்கு. மனப் புண்ணின், உடலில் தோன்றிய புண்களின் உபாதையும் சொல்லி முடியவில்லை. துடித்தேன். கதறினேன். புரண்டேன். குடிசை வாழ்வே இருந்திருக்க கூடாதா என்று நினைத்தேன். என்ன செய்வதென்று தோன்றவில்லை, உலகம் உண்மை அறியாதது பழிக்கும் போது, உயிருடன் இருப்பதில் என்ன புண்ணியம்! உலகம் என்னை—காமாந்தகாரி என்றழைத்தது. காமாந்தகாரியா நான்? யாரால் அப் பட்டத்தைப் பெற்றேன்? இதை ஒளித்து வைத்திருப்பதனால் என்ன பயன் என்பதனால்தான் இச்சுயசரிதத்தை எழுதலானேன்! பார்த்தவர்கள் இதைப் புத்தகமாக—வருங்கால யுவர்கள்—யுவதிகளுக்கு வாழ வழி காட்டும் வழிகாட்டியாக கொள்வதற்கு—பிரசுரிக்க இத்துடன் ரூபாய் இரண்டாயிரத்துக்கு 'செக்' எழுதி வைத்திருக்கிறேன். இதைப் பிரசுரிக்கவும். இதோ விஷப்பாட்டிலை எழுதிக் கொண்டே எடுக்கிறேன்.

"தீர்ப்பளியுங்கள்" யார் "காமாந்தகாரி"

Sri Saraswathi Vilasam Press, Mt. Rd. MADRAS-2

அவ்வை
நூலகம்.

எ[illegible]வெளியீடு!

# "வைஜயந்தியின் ஆசைக் காதலன்"

★

வைஜயந்தியின் நடனம் பல
இளைஞர்களின் உள்ளத்தில்
மோகவெறியை ஊட்டியது
ஆனால் வைஜயந்தி தனக்கு
ஆசைக் காதலன் யார் என்
பதை அறிவிக்கிருள்.

★

விபரங்களுக்கு

## செல்[illegible]ன் பிரசுரம்

22, கச்சே[illegible]ரோட், சென்னை-4.

Wrapper ... The Mode... Printers, Madras 1